# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2014
ரூ.10.00



கவர்ச்சி மோகம் - பொறுக்கி அரசியலில்
தமிழகத்தைத் தள்ளிய

# பாசிசக் கோமாளி!

# “புரட்சிக்கு ஏங்குது நாடு! இதுதான் தருணம் போராடு!!”

## – புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சி நாள் அறைகூவல்!

1917, நவம்பர்-7 ரஷ்யப் புரட்சியின் 98-ஆம் ஆண்டை நினைவு கூரும் வகையில், ‘‘அழுகி நாறும் அரசமைப்பு முறையைத் தூக்கியெறிவோம்! நம் கையில் அதிகாரம் இருக்கும் வகையில் மாற்று அதிகார அமைப்புகளுக்கான போராட்டக் கமிட்டிகளைக் கட்டியெழுப்புவோம்! நம் நாட்டிலும் ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிப்போம்! இம்மண்ணிலும் ஒரு சொர்க்கத்தைப் படைப்போம்! நவம்பர் - 7 ரஷ்யப் புரட்சி நாளை உயர்த்திப் பிடிப்போம்!’’ என்று சூளுரைத்து ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து தமிழகமெங்கும் நவம்பர் புரட்சிநாளைத் திருவிழாவாகக் கொண்டாடின.


சென்னை-குரோம்பேட்டையில்...

விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் பட்டுக்கோட்டை, தருமபுரி, பென்னாகரம், அஞ்செட்டி, திருவெண்ணெய்நல்லூர், தூத்துக்குடி மற்றும் தேனி மாவட்டத்தின் போடிநாயக்கனூர், தேவாரம், நாராயணத்தேவன் பட்டி, கம்பம், கூடலூர் ஆகிய பகுதிகளில் செங்கொடியேற்றி பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும், கிராமங்களில் பேரணியாக சென்றும் நவம்பர் புரட்சிநாள் விழாவைக் கொண்டாடினர். பென்னாகரம் பகுதியில் இளைஞர்களுக்கான வாலிபால் விளையாட்டுப் போட்டி நடத்தி பரிசளித்தனர். திருவெண்ணெய் நல்லூர் வி.வி.மு. சார்பில் பொய்கை அரசூரில் ஆதிக்க சாதியினர் வசிக்கும் பகுதியில் அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து மாட்டுக்கறி விருந்தளித்து மக்கள் விழாவாகக் கொண்டாடினர்.

திருச்சி மற்றும் மதுரையில், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., புஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய அமைப்புகள் இணைந்து நவம்பர் ரஷ்ய சோசலிச புரட்சி நாள் விழா அரங்கக் கூட்டங்களை நடத்தினர். ‘‘புரட்சிக்கு ஏங்குது நாடு! இதுதான் தருணம் போராடு!’’ என்ற தலைப்பில் திருச்சியிலும், ‘‘கம்யூனிச அகிலத்தின் 150-வது ஆண்டும் மறுகாலனியாக்கச் சூழலில் நவம்பர் புரட்சியின் இன்றைய தேவையும்’’ என்ற தலைப்பில் மதுரையிலும் நடைபெற்ற இக்கூட்டங்களில் தோழமை அமைப்புகளைச் சேர்ந்த முன்னணியாளர்கள் பலர் உரையாற்றினர். மதுரையில், பெ.வி.மு. தோழர்கள் ‘‘சாதி வெறியர்களுக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த வீராங்கனை விமலா தேவி’’யின் போராட்டத்தை சிறு நாடகமாக நடத்தி காட்டினர்.


சென்னை-மதுரவாயலில்...

பு.மா.இ.மு.வின் சார்பில், சென்னையில் மதுரவாயல் - பிள்ளையார் கோயில் தெரு; எழும்பூர் - சந்தோஷ் நகர்; குரோம்பேட்டை ஆகிய இடங்களில் நவம்பர் 7 ரஷ்யப் புரட்சிநாள் விழாவினை, பண்பாட்டு விழாவாக, உழைக்கும் மக்களோடு இணைந்து குடும்ப விழாவாக சிறப்பாகக் கொண்டாடினர். பகுதி முழுக்க செங்கொடிகளும், ஊரின் நுழைவாயிலில் அலங்கார வளைவுகளும் என ஊரே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் இப்பகுதிகளில் உழைக்கும் மக்கள் பங்கேற்புடன் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. தோழர்களோடு அப்பகுதி இளைஞர்களும் இணைந்து நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடுகளை செய்தனர்.

சென்னைவாழ் உழைக்கும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் பு.மா.இ.மு. தோழர்கள் குரோம்பேட்டையில் தொடங்கி திரிசூலம் விமான நிலையம், கிண்டி, அசோக் பில்லர், வடபழனி,

தொடர்ச்சி 35 - ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 2
டிசம்பர் 2014

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# அதிகார வர்க்கத்தின் அலட்சியத்திற்குப் பலியான மழலைச் செல்வங்கள்!

**த**ருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொத்துக் கொத்தாக பச்சிளம் குழந்தைகள் உயிரிழக்க காரணம் என்ன? இந்தக் கேள்விக்கு இரண்டு நேரெதிரான விடைகள் தரப்படுகின்றன.

இந்தச் சாவுக்கு காரணம் மருத்துவர்களின் அலட்சியமோ, ஊழியர்கள் மற்றும் மருத்துவக் கருவிகளின் பற்றாக்குறையோ அல்ல; தாய்மார்களின் ஊட்டச்சத்துக் குறைவு, இளவயது திருமணம், குழந்தைகளின் எடைக் குறைவு, மூச்சுத் திணறல் நோய் போன்றவையே மரணத்துக்குக் காரணம் என்று மருத்துவத்துறை அதிகார வர்க்கமும் அரசும் கூறுகின்றன.

''போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள் இல்லை. மொத்தத்தில் சுமார் 400 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதன் காரணமாக இன்குபேட்டரில் வைக்கப்பட்டிருக்கும் 28 குழந்தைகளைக் கவனிக்க இரண்டு செவிலியர்கள்தான் உள்ளனர். போதிய இன்குபேட்டர்கள் இல்லாத காரணத்தால் ஒரு இன்குபேட்டரில் 2,3 குழந்தைகள் வைக்கப்படுகின்றனர். கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச்சத்துக்காக வழங்கப்படும் உதவித்தொகை மாதக்கணக்கில் வழங்கப்படுவதில்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களில் உரிய மருத்துவர்களோ, மருத்துவக் கருவிகளோ இல்லை - இவை போன்றவையே குழந்தைகளின் மரணத்துக்கான உண்மையான காரணங்கள்; இவற்றை அரசு இருட்டடிப்பு செய்கிறது'' என்று ஊடகங்களும், எதிர்க் கட்சிகளும், சமூக அக்கறை கொண்ட சில மருத்துவர்களும் கூறுகின்றனர்.

மருந்தில்லை, மருத்துவரில்லை, கருவிகள், கட்டில்கள் இல்லை என்பனவெல்லாம் மறுக்கவியலாத உண்மைகள்தாம். படுப்பதற்கான பாயைக்கூட பிரசவத்துக்கு வரும் பெண்கள்தான் கொண்டுவரவேண்டும் என்பது தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எழுதப்படாத விதியாக இருக்கிறது என்கிறார்கள் மக்கள். பற்றாக்குறைகள்தான் பிரச்சினையா? போதுமான மருத்துவர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட்டிருந்திருந்தால் இத்தகைய மரணங்கள் தவிர்க்கப்பட்டிருக்குமா என்பதுதான் இதிலிருந்து எழும் கேள்வி. இதற்கெப்படி விடை காண்பது? தற்போது பதவியில் இருக்கும் மருத்துவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நடத்தையிலிருந்துதான் இதற்கான விடை நமக்குக் கிடைக்கிறது.

தருமபுரி குழந்தைகள் மரணம் குறித்த செய்தி வெளியானவுடனே, ''இதெல்லாம் சகஜம், தேசிய சராசரியை விட இந்த சாவு எண்ணிக்கை குறைவுதான்'' என்று பதிலளித்தார் அந்த மருத்துவக் கல்லூரியின் முதல்வர் இளங்கோவன். விலங்குகளைப் போல குளிர்காலத்தில் கூடுவதால் இந்த சீசனில் பிரசவமும் அதிகம், மரணமும் அதிகம் என்ற பொருள்பட, ''இதெல்லாம் திருப்பதி சீசன் போல ஒரு சீசன்'' என்று விசாரிக்கச் சென்ற மனித உரிமைப் பாதுகாப்பு மைய வழக்குரைஞர்களிடம் திமிராகப் பேசியிருக்கிறார் மருத்துவமனையின் டீன் நாராயண பாபு. ''மதுரை மருத்துவமனையில் கூடத்தான் ஒரே நாளில் 66 குழந்தைகள் இறந்தன'' என்றது மருத்துவர்கள் சங்கம். ''மருத்துவர்களையும் ஊழியர்களையும் குறை சொல்லாதீர்கள்'' என்று எச்சரித்தார் சுகாதாரத்துறை அமைச்சர்.

இவர்கள் யாருடைய அறிக்கையிலாவது பாதிக்கப்பட்ட மக்கள் மீதான கரிசனையோ, குழந்தைகளின் மரணம் குறித்த துயரமோ, இந்த மரணங்களை எப்படித் தடுப்பது என்ற அக்கறையோ கடுகளவேனும் தென்படுகிறதா? இவர்களுடைய பேச்சு முழுவதும் நிரம்பி வழிவது அதிகார வர்க்கக் கொழுப்பு, மக்களுக்கு எதிரான வன்மம், ஏழைகள் மீதான வெறுப்பு,

மேட்டுக்குடி வர்க்கத் திமிர் ஆகியவை மட்டும்தான்.

மருத்துவர் பற்றாக்குறை, ஊழியர் பற்றாக்குறை என்பதெல்லாம் உண்மைதான். எனினும், இரக்கமற்ற இத்தகைய கொடூரர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதனால் மக்கள் அடையப் போகின்ற பயன் என்ன? இலவச மருத்துவம் வழங்குவது அரசின் கடமை என்ற பொருளில் தனியார் மருத்துவக் கொள்ளைக்கு மாற்று அரசு மருத்துவமனை என்று கூறப்பட்டாலும், மக்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிராத இந்த மருத்துவர்களிடமிருந்து நோயாளிகள் என்ன சேவையைப் பெற்றுவிட முடியும்?

தற்போது தருமபுரி சாவுகள் அம்பலமான பின்னர், இறந்து போன பெரும்பான்மையான குழந்தைகளின் தாய்மார்களை கவுன்சலிங் செய்கிறோம் என்ற பெயரில் வெளியே விட மறுக்கிறது மருத்துவமனை நிர்வாகம். வெளியேறிய தாய்மார்களிடம் இறந்துபோன குழந்தைகளின் கேஸ் ஷீட் தரப்படவில்லை. இறந்துபோகும் குழந்தைகளின் உடல்களை, ஏழைப் பெற்றோரிடம் நள்ளிரவில் ஒப்படைத்து வெளியேற்றுவதன் மூலம் சாவுக் கணக்கை குறைத்துக் காட்டும் தந்திரம் இந்த மருத்துவமனையில் நீண்ட காலமாக நடப்பதும் தெரியவந்திருக்கிறது. லாக்-அப் கொலையை மறைக்கும் பொருட்டு தடயங்களை அழிக்கும் காக்கி உடைக் கிரிமினல் கும்பலின் அதே உத்தியைத்தான் இந்த வெள்ளை உடைக் கிரிமினல்களும் கடைப்பிடிக்கிறார்கள்.

போலீசு, அதிகார வர்க்கம், நாடாளுமன்றம், நீதித்துறை உள்ளிட்ட இந்த அரசமைப்பின் உறுப்புகள் தாம் அறிவித்துக் கொண்ட நோக்கத்துக்கு நேர் எதிராகச் செயல்படுவதை அன்றாடம் பல செய்திகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கனிமவளக் கொள்ளையை தடுக்க ஏற்படுத்தப்பட்ட துறையே திருட்டுக்கு ஏற்பாடு செய்து தருவது போல, சட்டம் - ஒழுங்கின் காவலர்கள் கிரிமினல்களின் காவலர்களாக இருப்பதைப் போல, பேறு கால மரணத்தைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனை மரணக் கூடமாகியிருக்கிறது. ●

## மோடி அரசு:

# அதானி குழுமத்தின் ஏஜென்சி!

‘‘நாலும் உதிர்த்தவன்’’ என்பார்களே, அதற்கு எடுத்துக் காட்டு யார் என்று கேட்டால் நரேந்திர மோடி என்று தயங்காமல் சொல்லலாம். பதவியில் அமர்ந்த பின்னரும் அதானியின் எச்சில் காசில்தான் மோடி தன்னுடைய இமேஜைப் பராமரித்துக் கொள்கிறார். சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் மத்தியில் மோடி முழங்கினாரே, அத்தனையும் அதானியின் செலவுதான் என்கிறது அவுட்லுக் வார இதழ். ‘‘மாப்பிள்ளை அவருதான், ஆனா அவரு போட்டிருக்கிற சட்டை என்னுடையது’’ என்று சொல்லாமல் சொல்லியபடி மோடியின் கூடவே அமர்ந்திருந்தார் கவுதம் அதானி.

ஆஸ்திரேலியாவில் ஜி-20 நாடுகளின் கூட்டத்துக்குப் போவதாக மோடி சொல்லிக் கொண்டாலும், அங்கே குவீன்ஸ்லாந்தில் உள்ள கார்மைக்கேல் நிலக்கரி சுரங்கத்தை அதானிக்கு வாங்கித் தருவதும், அங்கே வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியை ஏற்றுமதி செய்வதற்குரிய ரயில் வழித்தடம் மற்றும் துறைமுக வசதிகளை அந்த மாநில அரசைக் கொண்டே ஏற்பாடு செய்து தருவதும்தான் அவரது பயணத் திட்டத்தின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருந்திருக்கிறது. அதானி ஆஸ்திரேலியாவிலேயே சுரங்கம் வாங்கி விட்டதால், இந்தியா வல்லரசாகி விட்டது என்று மோடி பக்தர்கள் புளகாங்கிதம் அடையக்கூடும். யாருடைய காசைக் கொடுத்து சுரங்கத்தை வாங்கினார் என்பது முக்கியமல்லவா?

சுரங்கத்தை வாங்குவதற்கு பாரத ஸ்டேட் வங்கி, அதானிக்கு 6200 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இத்தனை பெரிய தொகையை, அதுவும் வெளிநாட்டில் சொத்து வாங்குவதற்காக, வேறு எந்த முதலாளிக்கும் எந்த இந்திய வங்கியும் கொடுத்ததில்லை. ராயல் பாங்க் ஆஃப் ஸ்காட்லாந்து, டாயிஷ் வங்கி, எச்.எஸ்.பி.சி., உள்ளிட்ட எந்த பன்னாட்டு வங்கியும் அதானிக்கு கடன் தர மறுத்த நிலையில்தான், பாரத ஸ்டேட் வங்கி கடன் கொடுத்திருக்கிறது. அதாவது கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

பன்னாட்டு வங்கிகள் அதானிக்கு கடன் தர மறுத்ததற்கு காரணம் என்ன? முதலாவதாக, இந்தச் சுரங்கமும் நிலக்கரியை ஏற்றுமதி செய்வதற்கான ‘‘அப்பாட் பாயின்ட்’’ துறைமுகமும் மிகப் பெரிய சுற்றுச்சூழல் பேரழிவை ஏற்படுத்தக் கூடியவை. கிரேட் பாரியர் ரீஃப் என்ற உலகின் மிகப்பெரிய பவளப்பாறைத் தொடருக்கு இத்துறைமுகம் அழிவைக் கொண்டுவரும். குஜராத்தின் மாங்குரோவ் காடுகளை அழித்து கண்ட்லா துறைமுகத்தை உருவாக்கிய யோக்கியரே அதானி என்பதால், இந்த அச்சம் நியாயமானது. இரண்டாவதாக, நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கான செலவு அதிகமாக இருக்கும் என்பதால் இது இலாபகரமான தொழிலாக இருக்காது. மூன்றாவதாக, மிகவும் முக்கியமாக, அதானி நிறுவனத்



> ஆஸ்திரேலியாவில் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் மத்தியில் மோடி முழங்கினாரே, அத்தனையும் அதானியின் செலவுதான் என்கிறது அவுட்லுக் வார இதழ். “மாப்பிள்ளை அவருதான், ஆனா அவரு போட்டிருக்கிற சட்டை என்னுடையது” என்று சொல்லாமல் சொல்லியபடி மோடியின் கூடவே அமர்ந்திருந்தார் கவுதம் அதானி.

தின் தற்போதைய மொத்தக் கடன் 81,122 கோடி ரூபாய். அதானி இந்தக் கடனை அடைப்பதற்கான வாய்ப்பு கிடையாது. இந்தக் கடனுக்கு நிகரான சொத்து மதிப்பும் அதானிக்கு இல்லை. எனவே 6200 கோடி ரூபாயும் வாராக்கடனாக மாறும் வாய்ப்பே அதிகம் என்பது பன்னாட்டு வங்கிகளின் மதிப்பீடு. இக்காரணங்களால் தான் அவை கடன் தர மறுத்திருக்கின்றன.

இந்த காரண காரியங்களையெல்லாம் மீறி இவ்வளவு பெரிய தொகையைக் கடனாக கொடுத்திருக்கும் பொதுத் துறை வங்கி, என்ன நம்பிக்கையில் கடன் கொடுக்கிறோமென்று விளக்கமளிக்க வேண்டுமல்லவா? கடன் ஒப்பந்தத்தின் விவரங்களை வெளியிட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கூச்சல் போட்டும்கூட விவரங்களைத் தர மறுக்கிறது ஸ்டேட் வங்கி. ‘‘வங்கிகள் கடன் கொடுப்பதையெல்லாம் பொதுமக்கள் விவாதத்துக்கா உட்படுத்த முடியும்?’’ என்று திமிராகக் கேட்கிறார் நிதியமைச்சர் ஜேட்லி.

மத்திய சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா சமீபத்தில் பேசியிருக்கும் பேச்சே, ஜேட்லிக்கு உரிய பதிலாக அமைந்திருக்கிறது. சிறு, குறு நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் தர மறுப்பதாகவும், கடன் வழங்குமாறு ரிசர்வ் வங்கி கொடுத்துள்ள வழிகாட்டுதலைப் புறக்கணிப்பதாகவும், இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகத்துக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் பதிலுக்குக் காத்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். (தமிழ் இந்து, 20.11.2014) ‘‘இதற்கெல்லாம் பதிலளிக்கத் தேவையில்லை’’ என்பதுதான் ஜேட்லி ஏற்கெனவே அளித்திருக்கும் பதிலின் பொருள்.

அதானிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கடன் என்பது இப்போது வெளியே தெரிகின்ற ஒரு சலுகை மட்டுமே. அங்கே ஆண்டொன்றுக்கு 60 மில்லியன் டன் நிலக்கரி எடுப்பது அதானியின் திட்டம். 2016-17 ஆம் ஆண்டில் இந்தியாவின் நிலக்கரிப் பற்றாக்குறை 185-265 மில்லியன் டன்னாக இருக்கும் என்பது இந்திய அரசின் மதிப்பீடு. அதானியின் நிலக்கரியை சர்வதேச சந்தை விலையில் இந்தியா இறக்குமதி செய்யும் என்பதை சொல்லத் தேவையில்லை. நிலக்கரியின் சர்வதேச சந்தை விலை குறைந்து போகும் பட்சத்தில், அதானி சொன்ன விலைக்கு இந்திய அரசு நிலக்கரியை வாங்கும். இது நடக்கவிருக்கும் கொள்ளையின் முழுப் பரிமாணம் அல்ல, ஒரு பரிமாணம் மட்டுமே.

2002-இல், குஜராத்தில் மோடியின் ஆட்சி துவங்கிய போது அதானி குழுமம் நடத்திய வணிகத்தின் மதிப்பு ரூ.3741 கோடி. 2014-இல் ரூ.75,659 கோடி. 20 மடங்கு வளர்ச்சி. அதானிக்கு குஜராத்தை திருடிக் கொடுத்த மோடி, அன்று முதல்வராக இருந்தார். இன்று பிரதமராகி விட்டதால் திருட்டு தேசியமயமாகியிருக்கிறது.

● தொரட்டி

ஆஸ்திரேலியாவின் குவீன்ஸ்லாந்து மாநிலத்திலுள்ள கார்மைக்கேல் நிலக்கரிச் சுரங்கத்தை அதானிக்கு வாங்கித் தருவது தொடர்பாக குவீன்ஸ்லாந்து மாநில அதிகாரிகளோடு பேசி முடிக்கும் நரேந்திர மோடி. (உடன்) பாரத ஸ்டேட் வங்கி தலைவர் அருந்ததி பட்டாச்சார்யா மற்றும் கௌதம் அதானி.



**எம்.ஜி.ஆர்.**

## கவர்ச்சி மோகம் - பொறுக்கி அரசியலில் தமிழகத்தைத் தள்ளிய

# பாசிசக் கோமாளி!

**இன்று ஜெயலலிதா நடத்திவரும் அடிமைக் கட்சிக்கும், அதன் இலஞ்ச ஊழல் முறைகேடுகளுக்கும், அடக்குமுறைக் காட்டாட்சிக்கும், பாசிச வக்கிரங்களுக்கும் வழிகாட்டி எம்.ஜி.ஆர். என்பதே உண்மை.**

'தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிக்கும் சதிகாரி' என்ற தலைப்பில் ஜெயலலிதாவைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரையை சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். தமிழ்ச் சமுதாயத்தை சுயமரியாதையற்ற கையேந்திகளாக, அரசியலற்ற மூடர்களாக, சாராய போதையில் மூழ்கிக் கிடக்கும் அடிமைப் பிண்டங்களாக மாற்றி வருகிறார், ஜெயலலிதா என்று அக்கட்டுரையில் குற்றம் சாட்டியிருந்தோம்.

இன்று ஜெயலலிதாவை விமரிசிக்கின்ற எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் உட்பட பலரும் எம்.ஜி.ஆரை மாபெரும் ஜனநாயகவாதியாகவும், ஊழலற்ற உத்தமராகவும், மக்களுக்காகப் பாடுபட்டு உயிர்துறந்த மாமனிதராகவும் காட்டுவதுடன், அவர் காட்டிய வழியில் செல்லத் தவறியதுதான் ஜெயலலிதாவின் குற்றம் என்பதாகவும் சித்தரிக்கின்றனர்.

எம்.ஜி.ஆர். தமிழகத்தைப் பத்தாண்டுகள் ஆண்டார்; அதில் மூன்றாண்டுகள் நடைபிணமாகவே இருந்து ஆண்டார். அவர் 1987-இல் இறந்தபோது ''இடி அமீன்: எழுச்சியும் வீழ்ச்சியும்'' என்ற புதிய திரைப்படம் சென்னையில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடியது. 'எம்.ஜி.ஆர்: தமிழகத்தின் இடி அமீன்', ஒரு 'சேடிஸ்ட்' - குரூர இன்பம் காண்பவர், 'துக்ளக்'கைப் போல திடீர் திடீரென்று முடிவுகளை மாற்றிக்கொள்ளும் கோமாளி என்று பத்தாண்டுகளாக கருணாநிதி கட்சியின் பத்திரிகைகள் எழுதி வந்தன. இதற்குப் பொருத்தமாக கத்தியை கடித்துக் கொண்டு பைத்தியம் போல முழித்துச் சிரிக்கும் எம்.ஜி.ஆரின் சினிமா படம் ஒன்றையும் தவறாது வெளியிட்டு வந்தன.

எம்.ஜி.ஆரின் மரணச் செய்தி வந்தவுடனே, பச்சோந்தித்தனமாக நிறத்தை மாற்றிக் கொண்டு நாற்பதாண்டு இனிய நண்பரை இழந்த துக்கத்தில் மூழ்கிவிட்டார், கருணாநிதி. கருணாநிதி மட்டுமல்ல, எம்.ஜி.ஆரிடம் அடி வாங்கிய போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எல்லா ஓட்டுக்கட்சிகளும், இத்தகைய கேடுகெட்ட 'ராஜதந்திரங்களை' நியாயப்படுத்திக் கொள்வதற்காக, இவற்றையெல்லாம் உயர்ந்த அரசியல் பண்பாடு என்று சித்தரிக்கத் தொடங்கிவிட்டனர்.

திராவிட இயக்கத்தின் அரசியல் சீரழிவைப் பயன்படுத்தியே அதற்கு குழி தோண்டுவது என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் சோ, சுப்பிரமணியசாமி, ஆர்.வெங்கடராமன், சங்கராச்சாரி உள்ளிட்ட பார்ப்பனக் கும்பலும் பார்ப்பன ஊடகங்களும் மோகன் குமாரமங்கலம், கல்யாணசுந்தரம் முதல் தா.பாண்டியன் வரையிலான போலி கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து இந்த எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா இணையைத் தமிழக மக்களின் தலையில் கட்டியிருக்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழின அடையாளங்களுக்கும் பெரியாரின் பகுத்தறிவுக்கும் சுயமரியாதைக்கும் சவக்குழி தோண்டியவர் எம்.ஜி.ஆர். இன்றைய ஜெயலலிதா ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்படுதைப்போலத்தான், எம்.ஜி.ஆரின் வள்ளல்த்தன அறிவிப்புகள் பலவும் இருந்தன. விவசாயியாகவும், தொழிலாளியாகவும், மீனவ நண்பனாகவும் நடித்து விட்டு, அதே மக்களை தேவாரம்-மோகன்தாசு தலைமை

இறந்தும் உயிர்வாழ்பவர்: எம்.ஜி.ஆர். உருவாக்கிய கவர்ச்சிவாத பொறுக்கி அரசியல்தான் இன்றும் தமிழகத்தில் கோலோச்சுகிறது.



யிலான போலீசு மிருகங்களை ஏவிக் கொடூரமாக ஒடுக்கியவர் எம்.ஜி.ஆர். அவரை மனிதநேயர், வள்ளல் என்பது நிகழ்கால வரலாற்றையே திரித்துப் புரட்டுவதாகும். இந்த உண்மையை மறைத்து, தெரிந்தே பார்ப்பன ஊடகங்களும் பிழைப்புவாத ஊடகங்களும் சினிமாக்காரர்களும் புளுகித் திரிகின்றனர்.

சந்தேகப்பிராணியான ஜெயலலிதா தனது உடன் பிறவாத சகோதரி சசிகலா, அவரது கணவர் நடராஜன் உட்பட விசுவாசிகள் மீதும் அமைச்சர்கள் மீதும் உளவுப்படை போலீசை விட்டு வேவு பார்ப்பதும், சொந்த புத்தி இல்லாமல் அவர்களுக்கு எதிராக மற்றவர்கள் கோள் மூட்டும் போதெல்லாம் பதவிகளைப் பறித்து அவர்களைப் பந்தாடுவதும், கஞ்சா வழக்குகள் பேடுவதும் எம்.எல்.ஏ., எம்பி.க்களைக்கூட தோட்டத்துக்கு இழுத்து வந்து அடிப்பதும் கூட எம்.ஜி ஆரிடம் கற்றுக்கொண்ட அரசியல் பாடம் தான். காரியத்தைச் சாதித்துக்கொள்ள அரசியல் பிரமுகர்களுக்குப் பலவகை விருந்து வைப்பதுகூட எம்.ஜி.ஆரிடம் ஜெயலலிதா கற்றுக்கொண்ட அரசியல் கலைதான். ஏன், ஜெயலலிதாவையே உளவு பார்த்து, மிரட்டி, ஒதுக்கி வைத்தார், அவரை விஞ்சிய சந்தேகப் பிராணியான, எம்.ஜி.ஆர்.

இன்று ஜெயலலிதா நடத்திவரும் அடிமைக்கட்சிக்கும், அதன் லஞ்ச ஊழல் முறைகேடுகளுக்கும், அடக்குமுறைக் காட்டாட்சிக்கும், பாசிசவக்கிரங்களுக்கும் வழிகாட்டி எம்.ஜி.ஆர். என்பதே உண்மை. இந்த உண்மை இன்றைய தலைமுறையினருக்குத் தெரியாது. இதனை அனுபவித்த முந்தைய தலைமுறையினரோ மறந்து விடுகின்றனர். இதுதான் அன்றாடப் பரபரப்புச் செய்திகளில் மூழ்கடிக்கப்படும் நமது மக்களின் மிகப்பெரிய பலவீனம். இந்த பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டுதான், அரசியல் அறிவும் ஜனநாயக உணர்வுமற்ற ஒரு மிகப்பெரிய வாக்கு வங்கியைப் பராமரித்து வருகிறார் ஜெயலலிதா. ஜெயலலிதா ஆட்சியைப் புரிந்து கொள்வதற்கு, அவருடைய 'அரசியல் உடன்கட்டை' எம்.ஜி.ஆரின் ஆட்சியைப் புரிந்து கொள்வது அவசியம். 1987-இல் எம்.ஜி.ஆர். இறந்ததை ஒட்டி, ''புதிய ஜனநாயகம்'' ஏட்டில் வெளியிடப்பட்ட ''ஒரு பாசிஸ்டின் மரணம்'' என்ற சிறப்புக் கட்டுரையை இங்கே சுருக்கித் தருகிறோம்.

### புர்ரட்சித் தலைவர்!

**கா**ங்கிரசுக்காரராக அரசியலுக்குள் நுழைந்த எம்.ஜி.ஆர்., தி.மு.கழகக்காரராகப் பிரபலமானார். ஒரு மாநிலக் கட்சியாக அ.தி.மு.க-வைத் தொடங்கினாலும் ஜனதாக் கட்சிப் பிரதமர் மொரார்ஜி தேசாய்-யின் மிரட்டலுக்குப் பயந்து, அகில இந்திய அ.தி.மு.க-வாக மாற்றிக் கொண்டு அண்ணாயிசமே அதன் கொள்கை என்று அறிவித்தார். அண்ணாவின் கொள்கைகளும் கம்யூனிசமும், சோசலிசமும் கலந்ததுதான் அண்ணாயிசம் என்று விளக்கமும் அளித்தார் 'புர்ரட்சித் தலைவர்'!

அண்ணாயிசம் போன்று பலப்பல அரசியல், சித்தாந்தக் கண்டுபிடிப்புகளை வகுத்தளித்த எம்.ஜி.ஆர்., தமிழகத்தைப் பத்து ஆண்டுகள் ஆண்டார்; அதில் மூன்றாண்டுகள் நடைபிணமாகவே இருந்து ஆண்டார். எம்.ஜி.ஆரின் சாவு அவரது பாசிசப் படுகொலைகளை, குரூர இன்பங்காணும் நடவடிக்கைகளை, கொடூரமான கோமாளித்தனங்களை மறைத்துவிட முடியாது. அவற்றை எம்.ஜி.ஆர். உடலோடு சேர்த்து மெரினா



ஆர்.வி -எம்.ஜி.ஆர். அணைப்பு : திராவிட இயக்க அரசியலை ஒழிக்க பார்ப்பனப் பிணைப்பு!

கடற்கரையில் புதைத்துவிட முடியாது. மெரினா - அங்குதானே எம்.ஜி.ஆரின் போலீசு வெறிநாய்கள் தேவாரத்தின் தலைமையில் மீனவர்களைக் கடித்துக் குதறின; அங்குதானே மீனவர் குப்பங்களைச் சூறையாடின. அவை நினைவுக்கு வருகின்றன. அவை தமிழகத்தின் இருள் நிறைந்த பத்தாண்டு வரலாறு ஏற்படுத்திய வடுக்கள்!

கருணாநிதி ஆட்சியின் இலஞ்சஊழல், அதிகார முறைகேடுகளைச் சொல்லி தூய்மையான ''அண்ணா''வின் ஆட்சிக் காணப் போவதாகச் சொன்னார், எம்.ஜி.ஆர். ஆனால், அவரது ஆட்சியில் தழைத்தோங்கிய இலஞ்சஊழல், அதிகார முறைகேடு, மோசடி, தில்லுமுல்லு, எத்து வேலை, பித்தலாட்டம் அனைத்திற்கும் மூலகர்த்தாவாக எம்.ஜி.ஆரே விளங்கினார். தமிழகத்தின் சுபீட்சத்திற்குப் பாடுபடுவதாகச் சொல்லி ஏராளமான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர் பெரும்பான்மையான மக்களை வறுமைக் கேட்டுக்குக் கீழே தள்ளிவிட்டு இலவசப் பற்பொடி, செருப்பு, புடவை, பிளாஸ்டிக் குடம், சத்துணவு என்று இவரது தானத் திற்குத் தவம் கிடக்கச் செய்தார்.

இடி அமீனையும் விஞ்சிவிடும் ஆடம்பர, வக்கிரவாழ்வும், விருந்தும், அரசு விழாக்களும் நடத்தினார். சென்னை மக்கள் வெள்ளத்தில் சிக்கித் தவித்தபோது ''சின்ன வீடு'' சினிமாப் பார்த்து மகிழ்ந்தார். 12 கோடிக்கு ஆடம்பரமாக உலகத் தமிழ்

மாநாடு நடத்தினார். கருணாநிதி நடத்தினார் என்பதற்காகவே அடுத்த உலகத் தமிழ் மாநாட்டைப் புறக்கணித்து, பங்கேற்பவர்களையும் தடுத்தார்.

**ஒரு வள்ளலும் ஓராயிரம் ஒட்டுண்ணிகளும்!**

''மாண்புமிகு புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல், இதயக்கனி, டாக்டர் எம்.ஜி.ஆர்.'' என்று தற்புகழ்ச்சியில் மூழ்கித் திளைத்தார். அரசு கட்டிடங்களின் எல்லா கல்வெட்டுகளிலும் தன் பெயரே இருக்க வேண்டும் என்று வெறியோடு உத்திரவிட்டார். முகத்துதிபாடும் கூட்டத்துக்கு பொன்னும் பொருளும் கொடுத்து வள்ளலென்றும், நோபெல் பரிசுக்குரிய மேதை என்றும் புகழ வைத்தார்.

இதயம் பேசுகிறது மணியன், மக்கள் குரல் டி.ஆர்.ஆர்., சண்முகவேல், சோலை, வலம்புரிஜான் ஆகிய அவரது முகத்துதிபாடும் பத்திரிக்கை எடுபிடிகள்; போலி கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரம், பண்ருட்டி ராமச்சந்திரன், ரங்கச்சாரி, வி.பி.ராமன் ஆகிய அரசியல் ஆலோசகர்கள்; மோகன்தாஸ் தலைமையில் ஒரு உளவுப்படை, தேவாரம் தலைமையில் ஒரு அதிரடிப்படை - இடி அமீனைச் சுற்றி ஒரு அல்லக்கைக் கூட்டம் அமைந்ததைப் போல இவர்கள் எம்.ஜி.ஆரைச் சுற்றியிருந்தனர்.

தனது எடுபிடிகளுக்கு அரசுச் சொத்துக்களை எம்.ஜி.ஆர். தானமாகக் கொடுத்தார். சென்னை மிருகக்காட்சி சாலை இருந்த இடத்தை பழனி பெரியசாமிக்கும், சென்னை வளசரவாக்கத்தின் புறம்போக்கை நடிகைகள் அம்பிகா-ராதாவுக்கும் போரூர் புறம்போக்கை சாராய உடையாருக்கும், மருவத்தூர் ஏரிப்புறம்போக்கை பங்காருவுக்கும் எழுதிக் கொடுத்தார்.

முனு ஆதி, லியாகத் அலிகான், மா.பொ.சி., அங்கமுத்து, உக்கம் சந்து, பழக்கடை பாண்டியன், கோடம்பாக்கம் குமார், சுலோச்சனா சம்பத், கல்யாணி ராமசாமி, அனகாபுத்தூர் ராமலிங்கம், பால குருவ ரெட்டியார் இப்படி ஒரு பெரிய ஒட்டுண்ணிக் கூட்டத்தை வாரியங்கள், அரசு நிறுவனங்களின் தலைவர்களாக்கி அரசாங்கப் பணத்தைச் சுருட்டிக்கொள்ள ஏற்பாடு செய்தார். ஜெயலலிதா, வெண்ணிற ஆடை நிர்மலா, கோவை முதலாளி வரதராஜுலு போன்ற அரசியல் வாடையே இல்லாதவர்களுக்கும் பதவிகளைத் தானம் செய்தார்.


பாசிசக் கோமாளியின் அடுத்த வாரிசு!

**பாசிசக் கோமாளி!**

தனது அரசியல் எதிரிகளை ஒழிக்கும் பொருட்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியவர்கள் மீது தேசத்துரோக வழக்கு, சட்டமன்ற பதவி பறிப்பு, வெடி குண்டு வழக்கு, இந்திராவுக்கு கருப்புக் கொடி காட்டிய தி.மு.க. உள்ளிட்ட கட்சியினர் மீது தாக்குதல், தனது அமைச்சர் மீதே கொலை வழக்கு என்று பல வக்கிரமான வழிகளை மேற்கொண்டார்.

மோகன்தாஸ் - தேவாரம் படையை ஏவிப் புரட்சியாளர்களைப் படுகொலை செய்தார். பத்திரிக்கைகள் மீது குண்டர்களை ஏவித் தாக்கினார்; சபாநாயகர் பாண்டியனை ஏவி அரசியல் எதிரிகளை சிறையிலிட்டார்; நக்சல்பாரிகள் மீதான அடக்குமுறையை விசாரிக்கப் போன பத்திரிக்கையாளர்களைத் தேவாரத்தை விட்டுத் தாக்கினார். சிறை - சித்திரவதை - படுகொலைகளில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதலிடத்துக்குக் கொண்டு வந்தார். தனது அரசுக்கு விரோதமாகத் தீர்ப்புச் சொல்லும் நீதிபதிகளையும் தனது அரசை விமர்சிக்கும் சட்டமன்ற உறுப்பினர்களையும் உளவு பார்க்கச் செய்தார்.

> **இன்று ஜெயலலிதாவை விமரிசிப்பவர்கள் எம்.ஜி.ஆரை ஜனநாயகவாதியாகவும் ஊழலற்ற உத்தமராகவும் சித்தரிக்கின்றனர். இது நிகழ்கால வரலாற்றையே புரட்டுவதாகும். உண்மையில் எம்.ஜி.ஆர். ஒரு பாசிசக் கோமாளி, சுயவிளம்பர மோகி, துன்புறுத்தி இன்பம் காணும் சேடிஸ்ட், தமிழகத்தின் இடி அமீன்!**

நாடு கடத்தும் சட்டம் என்றொரு வக்கிர மான சட்டத்தைக் கொண்டு வந்தார்.

பெரியாரின் வாரிசு, பகுத்தறிவு பாரம் பரியம் என்று சொல்லிக் கொண்டே குறி கேட்டுத்தான் எந்தச் செயலையும் செய்தார். கோஷ்டி பூசலால் ஆட்சிக்கும் கட்சிக்கும் நெருக்கடி வந்த போதெல்லாம் கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்கு ஓடுவதை வழக் கமாகக் கொண்டிருந்தார். தனது மனைவி மார்களில் சிலரையே அந்நிய உளவாளிகள் என்று அறிவித்துக்கொன்றான் இடி அமின். எம்.ஜி.ஆரோ ஒரு பாசிசக் கோமாளிக்கே உரிய முறையில் பத்திரிக்கைகளில் கீழ்க் கண்டவாறு விளம்பரம் கொடுத்தார்.

''அரசு நிர்வாகத்தில் சம்பந்தமில்லாத யாருடைய தலையீட்டையும், குறுக் கீட்டையும் நான் எப்போதும் விரும்புவ தில்லை. எனது மனைவியாக இருந்தாலும் அல்லது எனது உறவினர் என்று சொல்லிக் கொள்பவராக இருந்தாலும் அவர்களுக்கும் இது பொருந்தும். அமைச்சர்களே ஆனாலும் சரி, தலைமைச் செயலாளர் அல்லது உயர் அதிகாரிகள் சம்பந்தபட்ட ஏனைய யாராக இருந்தாலும் சரி என்னுடைய அபிப்பிராயத்தை அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.''

எம்.ஜி.ஆர். ஆட்சியின் ஒவ்வொரு அசைவிலும் அதன் அருவருக்கத்தக்க இழிவான அம்சம் முழுவதுமாக வெளிப் பட்டு அம்பலமான பின்னும், நோயுற்று நடைபிணமான பின்னும், அவர் மத்திய அரசுக்குத் தேவையான எடுபிடி என்பதால் ஆட்சியில் நீடிக்க அனுமதிக்கப்பட்டார்.

எம்.ஜி.ஆர் ஆட்சியின் பாசிச, சேடிச, கோமாளித்தனங்களை அவருடைய ''தோழமை''க் கட்சிகள், பத்திரிக்கைகளே நியாயப்படுத்த முடியாமற் தவித்த சம்பவங்கள் ஏராளமாக உண்டு. மறைமுக மாக அவரை ஆதரித்த துக்ளக், ஆனந்த விகடன், கல்கி, தினமணி, இந்து, எக்ஸ் பிரஸ் போன்ற பார்ப்பனப் பத்திரிக்கை களும், போலி கம்யூனிஸ்டுகளும் கூட அவற்றைக் ''கிண்டலடித்த - கண்டித்த'' சம்பவங்களும் ஏராளமாக உண்டு.

**அட்டைக் கத்தி வீரனின் அழுகை!**

பாசிச எம்.ஜி.ஆர் மூன்று தவணை களாக பத்தாண்டுகள் ஆட்சியிலிருந்தார். முதல் மூன்றாண்டுகள் போலீசையும் அடக் குமுறைச் சட்டங்களையும் ஏவி ஏழை - எளியவர்கள், தொழிலாளர்கள், விவ சாயிகள், ஆசிரியர் - அரசு ஊழியர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரையும் அடக்கி ஒடுக்கிவிட்டார். கடை சியாக, சங்கம் வைக்கும் உரிமைக்காகப் போராடிய போலீ சார் மீதே மத்தியப்படையை ஏவி ஒடுக்கினார். சந்தர்ப்ப வாதமும் அரசியல் பித்தலாட்டமும் அம்பலப்பட்டு போகவே 1980 நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்தார். மத்தியில் ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தி, எம்.ஜி.ஆரின் ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்ட போது எம்.ஜி.ஆர். நிலைகுலைந்து போனார்.

அதைத்தொடந்து, (சினிமாவில் வீரதீரமாகச் சண்டை யிட்ட எம்.ஜி.ஆர்.) இரண்டு கண்களிலும் ''கிளிசரினை'' ஊற்றிக் கொண்டு தமிழக மக்களிடம் குடம் குடமாக கண்ணீர் வடித்தார். விவசாய சங்கத் தலைவரிடமும், போலீசு சங்கத் தலைவரிடமும் மண்டியிட்டார். மன்னிப்பு கேட்காத குறையாக சரணடைந்தார். ஏராளமாகப் பொய்யான வாக்குறுதி களை வீசி மீண்டும் ஆட்சியைப் பிடித்தார்.

மீண்டும் பதவி நாற்காலியில் அமர்ந்தவுடன் அத்தனையும் காற்றில் பறந்தது. அதிகார மமதை தலைக்கேற, மீண்டும் அந்த பாசிச வேதாளம் தமிழக மக்கள் மீது பாய்ந்தது. அரசியல் எதிரி களையும், பத்திரிக்கைகளையும் கூட விட்டுவைக்கவில்லை. இதிலே வெற்றி பெற்ற பிறகு தமிழகத்தைத் தனது கட்சியின் ''ஊழல் பேரரசாக'' மாற்றுவதில் முழு மூச்சாக இறங்கினார். தனது பினாமிகளையும், சாராய சிற்றரசர்களையும், தனது புகழ் பாடும் விசுவாச ஒட்டுண்ணிக் கூட்டத்தையும் உருவாக்கிக் கொண்டார்.

சக்களத்தி சண்டை : ஆட்சி எம்.ஜி.ஆரின் பூர்வீக சொத்தா?



தனது அரசியல் - அதிகார அட்டூழியங்களுக்கும், பகற்கொள்ளைக்கும் வசதியாக இந்திராவின் இளைய பங்காளியாகவும் பாசிச பாதந்தாங்கியாகவும் மாறினார். இலஞ்சஊழலும், பாசிசஅடக்குமுறையும் நிறுவனமயமானது - ஆட்சியின் ஒழுங்கு விதியானது. அதன் பிறகு அவரது ஆட்சியின் அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க யாரும் துணியவில்லை. நோயுற்று நடைபிணமான நிலையில், அதைக் காட்டியே அனுதாப அலையை எழுப்பி, மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்ததும், எம்.ஜி.ஆரின் எடுபிடிகள் பொதுச்சொத்துக்களைச் சூறையாடுவதற்கான உரிமை பெற்றவர்களாகிவிட்டனர். சட்டமன்றத்துக்குள் சர்வாதிகாரி பாண்டியனும், வெளியே மோகன்தாஸ் - தேவரம் கும்பலும் காட்டுமிராண்டித்தனமாக ஆட்சி நடத்தினர். சாதி, மதவெறியர்களும், சாராய - மாஃபியா - கடத்தல் தலைவர்களும் கட்டுப்பாடற்ற கொள்ளையில் இறங்கினர்.


பத்தாண்டு ஆட்சியின் கருப்பு சிவப்பு புள்ளிகள் மீது வெளிச்சம் போட்டுக் காட்டினாலே போதும். அவரது பாசிச, சேடிச கோமாளித்தனங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

**மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு!**

★ எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே, முந்தைய அவசரநிலை ஆட்சியின் போது பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்கவும், வேறு சில கோரிக்கைகளுக்காகவும் மாணவர் போராட்டங்கள் வெடித்தன. மதுரையில் அவர்கள் நடத்திய அமைதியான ஊர்வலத்தின் மீது போலீசும் எம்.ஜி.ஆர். ரசிகர்களும் பாய்ந்து தாக்கினர். மதுரை கலெக்டரே இரும்புத் தொப்பியும் கைத்தடியும் ஏந்தி மாணவர்களை அடித்து நொறுக்கினார். தப்பி ஓடிய மாணவர்களின் விடுதிகளுக்குள்ளும் புகுந்து வெறியாட்டம் போட்டனர். நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு ரத்தக் காயங்கள்; 850 பேர் கைதாகி பொய் வழக்குகள்.

அதைத் தொடர்ந்து தூத்துக்குடி மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், மாநிலக் கல்லூரி, நெல்லை இந்திய மருத்துவக் கல்லூரி, தியாகராய கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போலீசாராலும் எம்.ஜி.ஆர். ரசிகர்களாலும் தாக்கப்பட்டனர். பல்கலைக்கழகம் நோக்கி ஊர்வலம் போனபோது ஊழியர்களாலும், போலீசாராலும் தாக்கப்பட்டனர்.

சிறுபான்மையினரின் கல்லூரிகள் என்கிற பெயரில் நிர்வாகம் தம்மை ஒடுக்குவதாகவும் ஊழலில் ஈடுபடுவதாகவும் சென்னை எஸ்.ஐ.இ.டி. கல்லூரி மாணவர்களும் புதுக்கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் அக்கல்லூரி நிர்வாகங்களை எதிர்த்துப் போராடினர். எம்.ஜி.ஆர் அரசு, கல்லூரி நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டு மாணவ - மாணவிகளைத் தாக்கவும், ஆசிரியர்களைப் பழிவாங்கவும் துணை போனது. எல்லாவற்றுக்கும் மேலாக தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான எம்.சி.ராஜா விடுதியின் ஊழல்களை எதிர்த்தும், கல் - மண் கலந்த உணவு, அடிப்படை வசதி மறுப்பு ஆகியவற்றை எதிர்த்தும் அவர்கள் பலதடவை முறையிட்டனர். கடைசியாக, அமைதியாக ஊர்வலம் போன மாணவர்களைத் தாக்கியது போலீசு. தப்பி ஓடி விடுதிக்குள் புகுந்த மாணவர்களை எம்.ஜி.ஆர். ரசிகர்கள் இரும்புக் கம்பிகள், சைக்கிள் செயின், சோடா பாட்டில்கள் சகிதமாகப் புகுந்து தாக்கினர். விடுதியைச் சூறையாடினர்.



பகுத்தறிவுக்குச் சவக்குழி, இந்து மதவெறிக்குப் பிள்ளையார் சுழி!

**தொழிலாளிகள் மீது எம்.ஜி.ஆர். குண்டர் படையின் தாக்குதல்!**

★ 1974-க்குப் பிறகு ஊதிய உயர்வே கண்டிராத பஞ்சாலைத் தொழிலாளர்கள் 77-78இல் வேலை நிறுத்தத் தாக்கீது கொடுத்த போது எம்.ஜி.ஆர். அரசு கண்டுகொள்ளவேயில்லை. வேலைநிறுத்தம் தொடங்கிய இரண்டாம் நாளே போராட்டத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்தோடு பிரச்சினையை நடுவர்தீர்ப்புக்கு விடுவதாக எம்.ஜி.ஆர். அரசு முடிவு செய்தது. இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் போலீசை ஏவித் தடியடிப் பிரயோகம் நடத்தியது; நிர்வாகத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர் மீது பொய் வழக்குகள் போட்டது. பின்னர், தொழிலாளர்களுக்கு எதிரான எல்லா வழக்குகளையும் விலக்கிக் கொள்ளப் போவதாகத் திடீரென்று 'சுதந்திர' தினத்தன்று எம்.ஜி.ஆர். அறிவிப்பு செய்தார். ஆனால், போலீசார் எந்த வழக்கையும் விலக்கிக் கொள்ளவில்லை.

தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் என்று யார் போராடினாலும், சட்டம் அதன் வேலையைச் செய்யும் என்று மிரட்டினார் எம்.ஜி.ஆர். ஆனால், இந்திரா கைது செய்யப்பட்டதை யொட்டி காங்கிரசு குண்டர்கள் வெடிகுண்டு வீசியும், பஸ்களைத் தாக்கியும் பலரைப் படுகொலை செய்தும் வெறியாட்டம் போட்டுக் கைதானவர்களை விடுதலை செய்தார். 1972-இல் தனிக்கட்சி தொடங்கியபோது அ.தி.மு.க.வினர் நடத்திய காலித்தனங்களுக்காக அவர்கள் மீது போடப்பட்ட எல்லா வழக்குகளையும் திரும்பப் பெறுவதற்கு உத்தரவிட்ட எம்.ஜி.ஆர்., பஞ்சாலைத் தொழிலாளருக்கு எதிராகப் போடப்பட்ட பொய் வழக்குகளை விலக்கிக் கொள்ளவில்லை.

> **எம்.ஜி.ஆர் வள்ளல்தான். அவர் அம்பிகா, ராதா, சாராய உடையார் உள்ளிட்ட தனது எடுபிடிகளுக்கு அரசு சொத்துகளைத் தானம் கொடுத்தார். அரசியல் வாடையே இல்லாத வெண்ணிற ஆடை நிர்மலா, ஜெயலலிதா போன்றோரை அரசுப் பதவியில் அமர்த்தினார். மக்களுக்கு இலவச பற்பொடி, செருப்பு, பிளாஸ்டிக் குடம் கொடுத்தார்.**

★ 1978 அக்டோபரில் பஸ் தொழிலாளர் போராட்டம் தன்னெழுச்சியாக வெடித்தது. பஸ் தொழிலாளர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு காணாது தன்னிச்சையாகக் குறைந்தபட்ச போனஸ் தருவதையே எம்.ஜி.ஆர். அரசு வழக்கமாகக் கொண்டிருப்பதை எதிர்த்து இரண்டே நாட்கள்தான் வேலைநிறுத்தம் செய்தனர். அதற்குள் 'மினிமிசா'வையும் அவசரசட்டத்தையும் எம்.ஜி.ஆர்.அரசு ஏவியது. 5000 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். கருங்காலிகளையும், போலீசையும், எம்.ஜி.ஆர். ரசிகர்களையும் வைத்து பஸ்கள் ஓட்டப்பட்டன. பஸ்களை நிறுத்துபவர்களைக் கண்டதும் சுட எம்.ஜி.ஆர். உத்திரவு போட்டார். வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்பவர்கள் மட்டுமல்ல, அதை ஆதரிப்பவர்களையும், நிதி அளிப்பவர்களையும் கூட சிறையிலடைக்கும் சட்டம் கொண்டு வந்தார் ''பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்கிற பெயரில் - எம்.ஜி.ஆரின் குண்டர்படை - அடையாள அட்டைகளும், வெள்ளைச் சட்டைகளும் அணிந்த தொண்டர்கள் என்கிற பெயரில் - பஸ் தொழிலாளர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்டது. அதன் பிறகு பத்தாண்டுகளாக எம்.ஜி.ஆர் அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்துத் தரும் குறைந்தபட்ச போனசுதான் கொடுக்கப்பட்டது.

★ பஸ் தொழிலாளர் போட்டத்தின் போது தீவிரமாக நடந்து கொண்டிருந்தன டி.வி.எஸ் - டி.ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர் போராட்டங்கள். ஆரம்ப காலத்திலிருந்து தங்கள் மீது நிர்வாகம் திணித்திருந்த கருங்காலி காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி தொழிற்சங்கத் தலைமையைத் தூக்கியெறிந்து போலி கம்யூனிஸ்டு வி.பி. சிந்தன் தலைமையை சென்னை - பாடி டி.வி.எஸ். தொழிலாளர்கள் தேர்ந்தெடுத்தனர். மதுரையிலிருந்து குண்டர்படையை இறக்குமதி செய்து ஆலைக்குள்ளேயே தொழிலாளர்களைத் தாக்கியது நிர்வாகம். தொழிலாளருக்குப் பாதுகாப்பு என்கிற பெயரில், பாடி - வில்லிவாக்கம் - அம்பத்தூர் தொழிற் வட்டாரமெங்கும் போலீஸ் முகாம்கள் அமைக்கப்பட்டன. டி.வி.எஸ். ஆலைக்குள் நிர்வாகத்தின் குண்டர் படை திரட்டப்பட்டது. நான்கு மாதக் கதவடைப்புக்குப் பிறகு, 350 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்த பிறகு நிர்வாகத்திடம் மன்னிப்புக் கோரும் நிபந்தனைப் பத்திரத்தில் கையொப்பமிட்ட தொழிலாளர்கள் மட்டும் வேலைக்கு அனுமதிக்கப்பட்டனர். நிர்வாகத்தின் குண்டர் படையும், போலீசும் தொழிலாளர்களை மிரட்டி அரசு பஸ்களில் கடத்திப் போய் டி.வி.எஸ். ஆலையில் உற்பத்தியை நடத்தினர்.

டி.வி.எஸ். ஆலைக்கு வெளியே போடப்பட்ட தொழிலாளர் பந்தல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. போராடும் தொழிலாளர்களை குண்டர்கள் தாக்கி அரிவாளால் வெட்டினார்கள். போலீசார் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தனர். டி.வி.எஸ். பாணியைத் தொடர்வது என்று மற்ற முதலாளிகள் தீர்மானிக்கவே, அம்பத்தூர் டி.ஐ. சைக்கிள்ஸ் ஆலையில் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும், கதவடைப்பும் தொடங்கியது. சென்னை நகரத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தம் செய்தனர்.


மதுரை மாநகரத் தேர்தலுக்குப் பிறகு டி.வி.எஸ்., டி.ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்காமல் அவர்களை ஒடுக்குவதில் இறங்கியது எம்.ஜி.ஆர். அரசு. 1978 அக்டோபர் 16-இல் மாநில மற்றும் மத்திய போலீசை ஏவி தடியடி, கண்ணீர்புகை குண்டு வீச்சு, துப்பாக்கிச்சூடு நடத்தி அமைதியாக மறியல் செய்த தொழிலாளர்கள் மீது பாய்ந்தது. ஆத்திரமுற்று வேலை நிறுத்தத்தில் இறங்கி வெளியேற முயன்ற ''டன்லப்'' தொழிலாளர்கள் மீது தடியடி நடத்தியது. ''டன்லப்'' தொழிற்சங்க அலுவலகத்திலிருந்த குசேலர், கோபு, சுப்பு ஆகிய தொழிற்சங்கத் தலைவர்களைக்

> **போராடுபவர்கள் மீது போலீசை மட்டுமல்ல, மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று கூறி அ.தி.மு.க. குண்டர்களையும் ஏவினார் எம்.ஜி.ஆர். விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், மீனவர்கள் முதல் நக்சல்பாரிகள் வரை யாரும் எம்.ஜி.ஆர் அரசின் அடக்குமுறைக்குத் தப்பவில்லை.**

கைது செய்து கிரிமினல் வழக்குகள் போட்டது.

போராட்டத்தை உடைக்கும் எம்.ஜி.ஆர்.-டி.வி.எஸ். முதலாளியின் அராஜக வேலைகளுக்கு எதிராக போலி கம்யூனிஸ்டு சங்கமான சி.ஐ.டி.யு. தலைவர் அரிபட் மற்றும் இருவர் உயர்நீதிமன்றத்தருகே உண்ணாவிரதம் இருந்தனர். ஐந்தாம் நாள் ''வலது'' கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவர்கள் கோபு, சுந்தரம் தலைமையில் எம்.ஜி.ஆரைச் சந்திக்க கோட்டை நோக்கி ஊர்வலமாகப் போனார்கள் டி.ஐ. சைக்கிள்ஸ் தொழிலாளர் குடும்பத்தினர். எம்.ஜி.ஆர். அரசின் உத்தரவுப்படி, அவர்களை வழிமறித்து கண்ணீர் புகை குண்டு வீசி தடியடி நடத்தியது மத்திய ரிசர்வ் போலீஸ்படை. பெண்களும், குழந்தைகளும், போலி கம்யூனிஸ்டுத் தலைவர்களும் படுகாயமுற்றனர். அதேசமயம், உயர்நீதிமன்றத்தருகே உண்ணாவிரதமிருந்தவர்களை எம்.ஜி.ஆரின் ரசிகர்படை தாக்கியது. 45 நிமிடம் வெறியாட்டம் போட்டு, போலீஸ் நிலையத்துக்கு அருகாமையில் இருந்த உண்ணாவிரதப் பந்தலைக் கொளுத்தியது; தொழிலாளர்களும் தலைவர்களும் சிதறி ஓடினர்.

எம்.ஜி.ஆர். அரசின் இந்தக் கொலைவெறியாட்டத்தைக் கண்டித்து 1978 அக்.23-ஆம் தேதி தமிழகம் தழுவிய கடையடைப்பு நடத்துவதாக காங்கிரசு மற்றும் ஜனதா தவிர அனைத்துக் கட்சிகளும் முடிவு செய்தன. கடையடைப்பை முறியடிப்பதாக எம்.ஜி.ஆர் யுத்தப் பிரகடனம் செய்தார். 10 நாட்களுக்குக் கல்லூரிகள் மூடப்பட்டு வேறு மாநில மற்றும் மத்திய போலீசுப் படைகள் குவிக்கப்பட்டன. போராட்டக்காரர்களில் 10,000 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.



சுயமரியாதை இல்லாத தோட்டத்து அடிமைகள்

எதிர்க்கட்சி எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சிறு வியாபாரிகள், கைத்தொழிலாளர்கள், பெண்கள் உட்பட அனைத்துப் பிரிவினரையும் கடை அடைப்பை முறியடிக்கும்படி பிரச்சாரம் செய்யும் விளம்பரத்தைப் பத்திரிகைகள், வானொலி மூலம் எம்.ஜி.ஆர். நடத்தினார். மன்னார்குடியில் போலீஸ் துப்பாக்கி சூட்டிற்கு 22 பேர் காயமடைந்தனர். பல நகரங்களிலும் அ.தி.மு.க. குண்டர்படை வெறியாட்டம் போட்டது. ஆனாலும், மாநிலந்தழுவிய கடையடைப்பு வெற்றிகரமாக நடந்தது.

★ இனி ''டி.வி.எஸ். - டி.ஐ. சைக்கிள்ஸ்'' பாணியிலே தொழிலாளர்களை ஒடுக்குவது என்று முதலாளிகளும் எம்.ஜி.ஆர். அரசும் தீர்மானித்தனர். ஆளும் கட்சித் தலைமையிலான ''அல்ட்ரா மரைன்'' ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம் கூட பலாத்காரமாக அடக்கி ஒடுக்கப்பட்டது. அதேகதிதான் போராடிய கோவை லட்சுமி மிஷின் டூல்ஸ், மேட்டூர் மில்ஸ், மின் வாரியத் தொழிலாளர்களுக்கும் நேர்ந்தது. அதன் பிறகு குறிப்படத் தகுந்த அளவு உறுதியாக நடந்தது திருச்சி ''சிம்கோ மீட்டர்ஸ்'' ஆலைத் தொழிலாளர் போராட்டம்தான். இங்கும் கருங்காலி ஐ.என்.டி.யு.சி.யின் தலைமையும், துரோக ஒப்பந்தமும் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டது. அதை எதிர்த்து சி.ஐ.டி.யு. தலைமையில் தொழிலாளர்கள் போராடினர்.

டி.வி.எஸ். - டி.ஐ. சைக்கிள்ஸ் போராட்டங்களை முறியடித்த மமதை, அமெரிக்காவில் தனக்கு ''ராஜ உபசாரம்'' செய்த ''சிம்கோ மீட்டர்ஸ்'' முதலாளியிடம் விசுவாசம் காரணமாக

போலீசையும், அ.தி.மு.க. வெண்சட்டைப் படையையும் ‘‘சிம்கோ’’ தொழிலாளர் மீது ஏவினார். தொழிலாளர்கள் மீது மட்டு மின்றி, சங்கத்தலைவர் உமாநாத் வீடும் வெடிகுண்டு வீசி தாக்கப்பட்டது. திருச்சி நகரமக்கள் பலர் தொழிலாளர் பக்கம் நின்று ஒத்துழைத்தனர்.

### 14 விவசாயிகள் சுட்டுக்கொலை!

★ தொழிலாளர்களையும், மாணவர் களையும் ஒடுக்கிய பிறகு விவசாயிகள் பக்கம் திரும்பியது, எம்.ஜி.ஆரின் பாசிச பார்வை. எம்.ஜி.ஆரின் தொகுதியாயிருந்த அருப்புக்கோட்டை அருகே, வாகை குளம் கிராம விவசாயிகள் ராட்சத ஆழ்கிணறு தோண்டுவதற்கு எதிராகப் போராடினர். அவர்கள் மீது போலீசு துப்பாக்கி சூடு நடத்தி 2 பெண்கள் உட்பட 5 பேரைச் சுட்டுக் கொன்றது, எம்.ஜி.ஆர். அரசு. அதன் பிறகு வழக்கம் போல இறந்து போனவர் குடும்பத்துக்குத் தலா ரூ.5000 நிதியும், விசாரணைக் கமிஷனும் அறிவித்தார் எம்.ஜி.ஆர். ஏற்கெனவே பல கோரிக்கை களை வைத்துப் போராடி வந்த நாராயண சாமி நாயுடு தலைமையிலான விவசாயிகள் சங்கம், மாநிலந் தழுவிய கடையடைப்பு நடத்தியது. கடையடைப்பை முறியடிக்கும் வெறியுடன் போலீசைக் குவித்து, பஸ்களை ஓட்ட முயன்றது, எம்.ஜி.ஆர். அரசு. வேடசந்தூர் உட்பட பல கிராமங்களில் நடந்த துப்பாக்கி சூட்டிற்கு 14 விவசாயிகள் பலியாயினர். நெல்லை - சங்கரன் கோவில் அருகே ஒரு துணை போலீஸ் அதிகாரி விவசாயப் பெண்களிடம் அத்துமீறி நடந்து கொண்டதால், ஆத்திர முற்று விவசாயிகளால் அடித்துக் கொல்லப்பட்டார்.

அதன் பிறகு எம்.ஜி.ஆரின் போலீசு, விவசாயிகள் மீது வெறித்தனமாகப் பாய்ந்தது. சென்னை - திருவள்ளூர் அருகே வள்ளியூர் கிராமத்தில் வீடுகளுக்குள் புகுந்து கிழவிகள், சிறுமிகள் உட்பட பெண்களை வெளியே இழுத்துப் போட்டு மிருகத்தனமாகத் தாக்கியது. பெண்களை லாரிகளில் ஏற்றி, உணவு, தண்ணீரின்றி கொளுத்தும் வெயிலில் நாள் முழுவதும் நிறுத்தித் துன்புறுத்தி சென்னை மத்திய சிறையில் அடைத்தது. தாக்குண்ட பெண் களைத் தனது பெண் அமைச்சருடன் போய் பார்த்து ஆறுதல் சொல்லி ஏய்க்க முயன்றார், எம்.ஜி.ஆர். போலீசு அவர் களைக் கற்பழிக்காது நல்ல முறையில் நடந்து கொண்டதற்குப் பாராட்டினார். பெண்களை முன்னிறுத்தும் கோழைகள் என்று அவதூறு பேசி, விவசாயச் சங்கத் தலைவர்கள் மீது கொலைக்குற்ற வழக்குப் போட்டார். இராணுவத்தை வரவழைத்து போராட்டத்தை ஒடுக்குவதாக மிரட்டினார்.


### அரசு ஊழியர்களைத் தாக்கிய அ.தி.மு.க. குண்டர்கள்!

★ தனது பாசிச ஒடுக்குமுறைகள் மூலம் இரத்த ருசி பார்த்த எம்.ஜி.ஆர். ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மீதும் பாய்ந்தார். ஊதிய உயர்வு, ஓய்வு வயது அதிகரிப்பு மற்றும் பிற கோரிக்கை களுக்காக 1978 மார்ச்சில் மாநில அரசு ஊழியர்கள் போராடிய போது தனது கட்சி தலைமையில் போட்டிக் கருங்காலி சங்கத்தை தொடங்கினார். 30 நாட்கள் வேலை நிறுத்தம் நடந்தது. ‘‘விவசாயப் பெண்களுக்கு மானத்தைக் காத்துக் கொள்ள துணி கூட இல்லை, உங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமா? பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள்’’ என்று எச்சரித்தார். பொதுமக்கள் என்கிற போர்வையில் அ.தி.மு.க. குண்டர்களை ஏவி அரசு ஊழியர்களைத் தாக்க முயன்றார். ஆயுதங்களுடன் வந்த குண்டர்களைப் பிடித்துக் கொடுத்த போதும், போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை.

வேலை நிறுத்தத்தை எதிர்க்கும்படி அரசு ஊழியர்களின் மனைவிமார்களுக்கு கோரிக்கை விட்டார், எம்.ஜி.ஆர். கைதுகள், வேலைநீக்கங்கள், தற்காலிக ஊழியர்கள் வேலை நீக்கம் - என பழிவாங்குவதில் ஈடுபட்டார். வேலைநீக்கம் செய்துவிட்டு புதிய ஊழியர்களை எடுக்கப் போவதாகவும் அறிவிப்புகள் கொடுத்தார். அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் கூட்டு உருவாகி உறுதிப்பட்டவுடன் சற்றுப் பின் வாங்கிக் கொண்டு, சில லரைச் சலுகைகளை அறிவித்தார். போராட்டத்துக்குத் தலைமையேற்ற சிவ.இளங்கோ தலைமையிலான கும்பலை விலைக்கு வாங்கினார்.

★ பரந்துபட்ட மக்களின் போராட்டங்களை ஒடுக்கு வதற்காக யாரைப் பயன்படுத்தினாரோ, அந்தப் போலீசாருக்கு எதிராகவே எம்.ஜி.ஆரின் தாக்குதல் திரும்பியது. பல்வேறு மாநிலங்களில் போலீஸ் சங்கங்கள் உருவானதைத் தொடர்ந்து

பிணந்தின்னிகள்: மெரினா மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு!





அமைச்சர்கள் பதவி பறிப்பு:
இதற்கும் ஜெ.யின் முன்னோடி எம்.ஜி.ஆரே!

**ஜெயலலிதா,
இன்று சசிகலா, நடராசன்
முதல் அமைச்சர்கள் வரையிலானோர்
மீது உளவுப்படையை ஏவுகிறார்.
எம்.ஜி.ஆரோ ஜெயலலிதாவை
விஞ்சிய சந்தேகப் பிராணி.
ஜெயாவையே உளவு பார்த்து
ஒதுக்கி வைத்தவர்.
தான் சந்தேகப்பட்ட
கட்சிக்காரர்களையெல்லாம்
தோட்டத்துக்கு இழுத்து வந்து
அடித்தவர்.**

தமிழகப் போலீசாரும் நைனார்தாஸ் மற்றும் ஜான் பிரிட்டோ தலைமையில் சங்கம் அமைத்தனர். ஆத்திரமடைந்த எம்.ஜி.ஆர். அதைத் தடை செய்துவிட்டு தானே தனது கருங் காலிகளைக் கொண்ட மூன்று சங்கங்களை அமைத்தார். அதன் கீழ்வர மறுத்த போலீசார் போராட்டத்தில் குதித்தனர். மத்திய ரிசர்வ் படையை வைத்து போராடிய போலீசாரை வேட்டை யாடினார் எம்.ஜி.ஆர். போலீஸ் குடியிருப்புகளில் புகுந்து பெண்கள், குழந்தைகளைத் தாக்கினார். சங்கத் தலைவர்கள் தலைமறைவாகினர். அவர்களை வேலைநீக்கம் செய்தார் எம்.ஜி.ஆர்., சங்கம் வைக்கும் முயற்சியை முறியடித்தார்.

போலீசுக்கும், விவசாயிகளுக்கும் மட்டுமல்லாது, ஏழை-எளிய மக்கள் அனைவருக்கும் ஏராளமான தேர்தல் வாக் குறுதி வழங்கினார், எம்.ஜி.ஆர். ஏழைகளுக்கு நிலமும், கல்லுடைப்போர், மூட்டை சுமப்போருக்கெல்லாம் மாதச்சம் பளமும், வீட்டுக்கொருவருக்கு வேலை, இல்லையானால் 100 ரூபாய் ஈட்டுத் தொகை, ரேசனில் போடும் 5 கிலோ அரிசிக்கு ஒரு கிலோ இலவசம், ஏழைகள் - முதியோருக்கு ஓய்வூதியம், வேலையில்லா பட்டதாரிகள், ஆசிரியருக்கு நிவாரண நிதி, தாலிக்குத் தங்கம், வேலையில்லாத நாட்களில் கூலி விவிசாயிகளுக்கு ஒரு ரூபாயும் ஒருகிலோ அரிசியும் என்று எவ்வளவோ வாக்குறுதிகள் - அவ்வளவும் காற்றில் பறக்க விடப்பட்டன.

★ பெரியாரின் பகுத்தறிவு - சமூக சீர்திருத்த இயக்கங் களைத் தொடர்ந்து சற்று வரம்புக்குள் இருந்த சாதி, மதவெறி யர்கள், எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்தபிறகு புதிய நம்பிக்கை - வேகத்துடன் சாதி-மதக் கலவரங்களில் ஈடுபட்டனர். எம்.ஜி.ஆர். கட்சி எம்.எல்.ஏ. கிருஷ்ணன் தலைமையில் தொடர்ந்து ஒருவார காலத்துக்கு விழுப்புரம் நகரில் தாழ்த்தப் பட்டவர்கள் வேட்டையாடப்பட்டனர். 12 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். குடிசைகள் கொளுத்தப்பட்டன. மண்டைக்காடு, புளியங்குடி, மீனாட்சிபுரம், பேர்ணாம்பட்டு, ராஜபாளையம், ராமநாதபுரம் ஆகிய இடங்களில் சாதி-மதக் கலவரங்கள் என்கிற பெயரில் தாழ்த்தப்பட்டவர்களும், மீனவர்களும் தாக்கப்பட்டனர். இந்து முன்னணியின் பெயரில், எம்.ஜி.ஆர்.கட்சியினரின் ஆதரவுடன் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் வேகமாக வளரத் தொடங்கியது.

பண்ணையார்களும், அ.தி.மு.க. காரர்களும், முதலாளி களும், போலீசாரும் பல கொலைகள் புரிந்தனர். தஞ்சை விவசாய சங்கத் தலைவர் வெங்கடாச்சலம், பண்ணையார் களால் கொல்லப்பட்டார். நாகை எம்.பி. முருகையன் அ.தி.மு.க. காரனால் கொல்லப்பட்டார். மதுராந்தகம் அ.தி.மு.க. அலுவலகத்திலேயே ஒரு தாழ்த்தப்பட்ட பெண் கற்பழித்துக் கொல்லப்பட்டார். கோயில் நகை கொள்ளை களில் அ.தி.மு.க.வினர் சம்பந்தப்படிருந்தனர். திருச்செந்தூர் கோவிலில் நகை சரிபார்க்கும் அதிகாரி கொல்லப்பட்டார். இந்த வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு எம்.ஜி.ஆர் அரசு முயலவேயில்லை; காரணம் தெரிந்ததே!

★ மூன்றாவது முறை ஆட்சிக்கு வந்த பிறகு, கண்டவர் களை எல்லாம் கடித்துக் குதறத் தொடங்கவிட்டது, எம்.ஜி.ஆர் அரசு. போலீஸ் ''லாக்-அப்'' சித்திரவதை கொலையில்

நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் தமிழகப் போலீசு, சென்னை - வியாசர்பாடியில் சந்தேகத்தின் பேரில் இழுத்துப் போன ஒரு இளைஞரை அடித்துக் கொன்றது. நியாயம் கேட்கத் திரண்ட பகுதி மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 5 பேரைக் கொன்றது.

**மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு!**
**நக்சல்பாரிகள் நரவேட்டை!**

உலக வங்கி உத்தரவின் கீழ் மெரினா கடற்கரையை அழகு படுத்துவதாக முடிவு செய்து பெரும் போலீஸ் படையுடன் போய் இரவோடு இரவாக மீனவர் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றுவதற்காக, ஆத்திரத்தைத் தூண்டி துப்பாக்கி சூடு நடத்தி, பலரைக் கொன்றது; மீனவர் வீடுகளுக்குள் புகுந்து சூறையாடியது.

பஸ் வசதி கோரிப் போராடிய மக்களைக்கூட விட்டு வைக்கவில்லை. பெரம்பலூர் அருகே வேப்பந்தட்டை கிராம மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி மூவரைக் கொன்றது. பெரும் போலீஸ் படை கிராமத்துக்குள் புகுந்து கண்மண் தெரியாமல் தாக்கியது. மிரண்டு போன மக்கள் தப்பி ஓடி, காடுகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

★ சாதாரண மக்கள் மீது இப்படி கொலைவெறித் தாக்குதல் நடத்திய பாசிச எம்.ஜி.ஆர். கம்யூனிச புரட்சியாளர்களை விட்டு வைப்பாரா? வட ஆற்காடு, தருமபுரி, ராமநாதபுரம் மாவட்டங்களில் கம்யூனிச புரட்சியாளர்கள் 21 பேரை மோகன்தாஸ் - தேவாரம் போலீஸ் கும்பலை ஏவி படுகொலை செய்துவிட்டு, ''நக்சலைட்டுகளுடன் போலீசு மோதல்'' என்று கதை கட்டினார். நக்சலைட்டுகளைப் பூண்டோடு ஒழிக்கப் போவதாக எம்.ஜி.ஆர். சபதமேற்றார். போலீசின் படுகொலைகளை விசாரிக்கப்போன மக்கள் உரிமை அமைப் பினரையும், பத்திரிக்கையாளரையும் கூட போலீசு தாக்கியது. மாநிலம் முழுவதும் பலர் மீது தேசவிரோதப் பொய் வழக்குப் போட்டது.

வரம்பில்லாத இலஞ்ச ஊழல், அதிகாரமுறைகேடுகளில் மூழ்கிக் கிடந்த எம்.ஜி.ஆர். அவற்றை அம்பலப்படுத்திக் குற்றஞ்சாட்டுவோரையே பழிவாங்கும் சட்டம் கொண்டு வந் தார். அதன்படி குற்றஞ்சாட்டுவோர்தான் அவற்றை நிரூபிக்க வேண்டும்; தவறினால், அவர்கள் சிறையில் தள்ளப்படுவர் என்று மிரட்டினார். கடும் எதிர்ப்பிற்குப் பிறகு, அதை விலக்கிக் கொண்டார்.

அரசை விமர்சிக்கும் ''அப்பாவி'' பத்திரிக்கைகளைக்கூட விட்டு வைக்கவில்லை. ஆபாசத் தடைச்சட்டம், பத்திரிக்கைத் தடைச்சட்டம் என்கிற பெயரில் ''சுவரொட்டி, கருத்துப் படம், பாடுவது, பேசுவது, எழுதுவது கூட கிரிமினல் குற்றம் என்கிற கொடிய அடக்குமுறைச் சட்டம் கொண்டுவந்தார். குதிரை களை விரட்டுவது, பட்டம் விடுவது, வாகனங்கள் ஓசை எழுப்புவது, வாகனங்களை சாலைகளில் நிறுத்துவது, பரீட்சைகளில் காப்பி அடிப்பது ஆகியவைகூட கிரிமினல் குற்றங்கள் என்று சட்டம் கொண்டு வந்தது - ஆகியவை யெல்லாம் எம்.ஜி.ஆர் அரசின் சாதனைகள்!

★ அ.தி.மு.க. ஆரம்பித்ததிலிருந்து தாய்மார்களுக்காக முதலை கண்ணீர் வடித்து வந்த எம்.ஜி.ஆர், சாராயம், லஞ்ச ஊழலின் பரம எதிரி போல நடித்தார். ஆட்சிக்கு வந்ததும் மது விலக்குச் சட்டத்தைக் கடுமையாக்கினார். இது கள்ளச்சாராய பெரும் புள்ளிகளுக்கும், போலீசாருக்கும் கொள்ளையடிப்பதற்கு மிகவும் வசதியாகிப் போனது. கள்ளச் சாராயத்தையும், லஞ்சத்தையும் ஒழிக்கும் நடவடிக்கை என்று சொல்லிக் கொண்டு பணம் கட்டி உரிமை பெற்றவர்களுக்கு மட்டும் சாராயம் குடிக்க அனுமதி என்றார். அப்புறம், படிப்படியாக கள்ளு - சாராயக் கடைகளை முழுவதுமாகத் திறந்து விட்டார். சாராயத் தொழிற்சாலை வைக்கும் உரிமை வழங்கியதில் கோடிக்கணக்கில் லஞ்சம் வாங்கி அம்பலப்பட்டு போனார்.

மதம் ஏழை - எளிய மக்களை ஏய்க்கும் போதையாக இருப்பதைப் போலவே, சினிமா ஒரு கவர்ச்சிப் போதையைத் தரு வதைப் புரிந்துகொண்ட எம்.ஜி.ஆர். அதைக் கொண்டு கிராமப்புற விவசாயி களையும், நகர்ப்புற உதிரிப் பாட்டாளிகளை யும் ஏய்த்தார். போலி கம்யூனிஸ்டுகளின் கூட்டு, பிற பகுதி உழைக்கும் மக்கள் ஆதரவைப் பெற உதவியது. சத்துணவு உட் பட ஏழைகள் மீதான அவரது கரிசனையும் தான தருமங்களும் நிலப்பிரபுத்துவக் கொடுங்கோலர்களுக்கே உரித்தான அடிமைகளின் பாலான பரிவுதான்.

அவசரநிலை பாசிச ஆட்சியை ஆதரித்த எம்.ஜி.ஆர். அதன் கொடுமைகளை விசாரித்த ஷா, அனந்த நாராயணன் மற்றும் இஸ்மாயில் கமிசன் அறிக்கைககளைக் குப்பைத் தொட்டியில் வீசினார். சென்னை மத்திய சிறை சித்திரவதைகளுக்காக குற்றஞ் சாட்டப்பட்ட பொன்.பரமகுரு, வித்யா சாகர் உள்ளிட்ட போலீசு குற்றவாளி களுக்குப் பதவி உயர்வளித்தார். ஜனதா ஆட்சியானாலும், அது கொண்டு வந்த தொழிலாளர் விரோத தொழிலுறவு மசோதா போன்றவற்றை ஆதரித்தார். தாய்க் குலத்தைப் பற்றி நீலிக்கண்ணீர் வடித்து வந்த எம்.ஜி.ஆர். ராஜீவ் கொண்டுவந்த பிற் போக்குத்தனமான முஸ்லீம் மண முறிவு (ஷாரியத்) சட்டத்தை ஆதரித்தார்.

''ஐயா, தருமவானே, நீங்களாகப் பார்த்து ஏதாவது தான தர்மம் கொடுங்கள்'' என்று கையேந்தி நிற்பவர்களுக்கு பரோபகாரியா கவும், ''இது எங்கள் உரிமை'' என்று போராடுபவர்களுக்குப் பரம எதிரியான பாசிஸ்டாகவும் விளங்கியவரே எம்.ஜி.ஆர்.!

● ஆர்.கே.

(புதிய ஜனநாயகம், 1-15, ஜனவரி 1988)

# எட்டப்பன் போனார்! தொண்டைமான் வந்தார்!

**நாட்டைப் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளின், உள்நாட்டு தரகு முதலாளிகளின் சொத்தாக்கிவிடும் திட்டத்தோடு செயல்படுகிறது, மோடி அரசு.**

நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்று ஆறு மாதங்கள் முடிவதற்குள்ளாகவே இந்தியாவைச் சேர்ந்த மிகப்பெரும் தரகு முதலாளிகளின் சொத்து மதிப்பு அதிகரித்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. கடந்த ஆறு மாதங்களில் இந்தியப் பொருளாதாரம் ஒரு அங்குலம்கூட முன்னே நகர்ந்திராதபோது, கார்ப்பரேட் முதலாளிகளின் சொத்து மதிப்பு எகிறிப் பாய்ந்தது எப்படி? ஊரான் சொத்தைக் கொள்ளையடித்து திடீர்ப் பணக்காரர்கள் உருவாவது போல, நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதன் வழியாகத்தான் அவர்களின் சொத்து மதிப்பு எகிறியிருக்கிறது. இக்கொள்ளைக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் புரோக்கர் வேலையைத்தான் மோடி அரசு செய்து வருகிறது.

காப்பீடு துறையில் 49 சதவீதம் வரை அந்நிய முதலீட்டை அனுமதிப்பதற்கு ஏற்பச் சட்டத் திருத்தம் கொண்டுவருவது; முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு கொண்டுவந்த நிலம் கையகப்படுத்தும் சட்டத்தைத் திருத்துவது; நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பது; பொதுத்துறை வங்கிகளில் அரசின் பங்கை 52 சதவீதம் அளவிற்குக் குறைப்பது, பல்லாயிரம் கோடி சொத்துக்களைக் கொண்டுள்ள ரயில்வே துறையில் தனியார்மயத்தைப் புகுத்துவது - என அவரது அரசு அறிவித்துவரும் சீர்திருத்தங்கள் இந்த புரோக்கர் வேலைக்குச் சான்று பகர்கின்றன. நரேந்திர மோடி தனியார்மயத்தைத் தீவிரப்படுத்தும் வேகத்தைப் பார்த்தால், அவரது ஆட்சிக் காலம் முடிவதற்குள் இந்த நாடே கார்ப்பரேட் முதலாளிகளின் தனிப்பட்ட சொத்தாகிவிடும்.

இத்தனியார்மய நடவடிக்கைகளை நாட்டின், மக்களின் நலனை முன்னிறுத்தித்தான் செய்வதாக வாய்பந்தல் போட்டு வருகிறார், மோடி. கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் கோரியபடி தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்த முயலும் அவர், அதற்கு உழைப்பே வெல்லும் எனப் பெயரிடுகிறார். தொழிலாளர்களின் வேலையைப் பாதுகாப்பதற்காகவே நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கப் போவதாக அறிவிக்கிறார், அவரது நிதியமைச்சர் அருண் ஜேட்லி. இந்த அறிவிப்பையும் இந்தியாவைச் சேர்ந்த தரகு முதலாளிகளின் சங்கங்கள் இணைந்து நடத்திய இந்தியப் பொருளாதார மாநாட்டில் வெளியிடுகிறார், அவர். அனைவருக்கும் வங்கிக் கணக்கு என்ற கவர்ச்சித் திட்டத்தைத் தொடங்கிவைத்தபொழுது, இது பொருளாதாரத் தீண்டாமையை ஒழிப்பதற்கான முயற்சி என்றார், மோடி. ஆனால், இத்திட்டத்தின் பின்னே சமையல் எரிவாயு மானியத்தை வங்கிக் கணக்கில் செலுத்தும் சீர்திருத்தம் மறைந்திருந்தது இப்பொழுது அம்பலமாகியிருக்கிறது.

பாசிஸ்டுகள் எப்பொழுதுமே மக்களை மயக்கும் கவர்ச்சி முழக்கங்களின் மூலம்தான் தமது நோக்கத்தை ஈடேற்றிக் கொள்கிறார்கள். இட்லர்கூட தேசிய சோசலிசம் என்ற முழக்கத்தைத்தான் மக்கள் முன்வைத்தான் என்பதை நாம் இங்கு நினைவுகூர்வது அவசியமானது. மோடி தனது தேர்தல் பிரச்சாரத்தின்பொழுது நல்ல காலம் பொறக்கப் போகுது என முழங்கியதன் பின்னே முழுக்க முழுக்க கார்ப்பரேட் முதலாளிகளின் நல்லகாலம்தான் இருந்தது, இருக்கிறது என்பதைத்தான் அவரது இந்த ஆறு மாத கால ஆட்சி நிரூபித்திருக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடியுடன் நிதியமைச்சர் அருண் ஜேட்லி: கார்ப்பரேட் முதலாளிகளின் விசுவாச புரோக்கர்கள்.



பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிரான தடைகளை உடைத்தெறிய வேண்டும் என ஜி-20 நாடுகள் மாநாட்டில் சூளுரைத்திருக்கிறார், மோடி. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு எதிராக விவசாயிகள் போராடத் துணிந்தால், தொழிலாளர் நலச் சட்டத் திருத்தத்துக்கு எதிராகத் தொழிலாளர்கள் போராடத் துணிந்தால், மானிய வெட்டுகளுக்கு எதிராகப் பொதுமக்கள் போராடத் துணிந்தால், அப்போராட்டங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்க வேண்டும் என்பதைத் தாண்டி இதற்கு வேறு பொருள் கொள்ளமுடியாது. காங்கிரசு அணிந்து கொண்டிருந்த மனித முகத்துடன்கூடிய பொருளாதார சீர்திருத்தம் என்ற முகமூடியெல்லாம் மோடிக்குத் தேவைப்படவேயில்லை.



மோடி அரசு கொண்டுவரத் திட்டமிட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டத் திருத்தத்தை எதிர்த்துப் பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

முந்தைய காங்கிரசு கூட்டணி அரசில் சில சில்லறை சலுகைகளை விவசாயிகளுக்கு அளிக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டிருந்த புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை, கார்ப்பரேட் முதலாளிகளின் விருப்பங்களுக்கு ஏற்ப திருத்துவதற்கு மோடி அரசு முடிவு செய்திருப்பதும்; எதிர்வரும் ஜனவரி 1 முதல் சமையல் எரிவாயு உருளைக்கு வழங்கப்படும் மானியத்தை நேரடியாகப் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தும் திட்டத்தை நாடெங்கும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதும் இந்திய மக்களுக்கு மிகக் கொடூரமான கெட்ட காலம் நெருங்கிவிட்டதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

மானியப் பணத்தைப் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் போடுவது என்ற நடைமுறை, மானியத்தை வெட்டுவதற்கான தந்திரமான திட்டமாகும். ஏனென்றால், இத்திட்டப்படி ஒவ்வொரு குடும்பமும் சமையல் எரிவாயு உருளையை சந்தை விலையில் - கிட்டதட்ட 900 ரூபாய் கொடுத்து வாங்கிய பிறகுதான் மானியம் வங்கிக் கணக்கில் போடப்படும். மாதச் சம்பளக்காரர்களே மாதக் கடைசியில் தடுமாறி நிற்கும் பொழுது, தினக்கூலி தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்தத் திட்டம் எரிவாயு உருளையை இனி எட்டாக் கனியாக்கிவிடும். சமையல் எரிவாயுவிற்கு அடுத்து, உணவு மானியத்திலும் 30,000 கோடி ரூபாய் அளவிற்கு மறைமுகமாக வெட்டிவிடுவதற்குத் தயாராகி வருகிறது, மோடி அரசு.

காப்பீடு துறையில் அந்நிய முதலீட்டை 49% வரை அதிகரிக்க அனுமதிக்கும் சட்டத் திருத்தத்தை எதிர்த்து கொல்கத்தா நகரில் காப்பீடு நிறுவன ஊழியர்கள் நடத்திய சாத்வீகப் போராட்டம்: மெழுகுவர்த்திகளால் மோடியைச் சுட்டுவிட முடியாது.



மானிய வெட்டின் மூலம் மட்டுமல்ல, இதுவரை கேள்வியேபட்டிராத வழிகளின் மூலம் மக்களைக் கொள்ளையடிக்கத் துணிந்துள்ள ஒரு கிரிமினல் அரசை நாம் எதிர்கொண்டுள்ளோம் என்பதை பிரீமியம் ரயிலும், டீசல், பெட்ரோல் மீதான கலால் வரி 100 சதவீதம் உயர்த்தப்பட்டிருப்பதும் உணர்த்துகின்றன. பிரீமியம் ரயில் கட்டணம், அந்த ரயில் புறப்படும் தேதியும் நேரமும் நெருங்க நெருங்க பல மடங்காக ஏறிக்கொண்டே போகும் விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. தனியார் ரயில் பயண முகவர்கள் பயணிகளின் அவசரத்தையும், டிக்கெட்டுக்கான டிமாண்டையும் பொருத்து சட்டவிரோதமாக அடித்துவந்த கொள்ளையை, மோடி அரசு பிரீமியம் ரயில் மூலம் சட்டபூர்வமாக ரயில்வே துறையே கொள்ளையடிப்பதற்கான ஏற்பாடாக மாற்றிவிட்டது. மேலும், முன்பதிவு பயணச்சீட்டு, உடனடி பயணச்சீட்டு வழங்கும் சேவைகளை முழுக்க முழுக்கத் தனியாரிடம் ஒப்படைக்கும் ஏற்பாடு மூலம் கள்ளச் சந்தைக்கான புதிய வாய்ப்புகளைச் சட்டபூர்வமாகவே திறந்துவிட்டுள்ளது.

சமீபத்தில் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை சரிந்த பிறகும், அதற்கு ஏற்ப பெட்ரோல், டீசலின் விற்பனை விலை குறையவில்லை. இதற்குக் காரணம், கச்சா எண்ணெயின் விலை சரிந்த நேரம் பார்த்து, பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்படும் கலால் வரி 100 சதவீதம் உயர்த்தப்பட்டதுதான். இதுவொரு தந்திரமான



> இரயில்வேயில் முன்பதிவு பயணச்சீட்டு, உடனடி பயணச்சீட்டு வழங்கும் சேவைகளை முழுக்கமுழுக்கத் தனியாரிடம் ஒப்படைக்கும் ஏற்பாடு மூலம், கள்ளச் சந்தைக்கான புதிய வாய்ப்புகளைச் சட்டபூர்வமாகவே மோடி அரசு திறந்துவிட்டுள்ளது.

முடிவு. இந்த உயர்வின் மூலம் இரட்டை இலாபத்தை மோடி அரசு அடைந்திருக்கிறது. கச்சா எண்ணெயின் விலை சரிந்தாலும், தனது வரி வருவாய் சரியாமல் இருப்பதற்கு ஏற்ப இந்த வரி உயர்வை அமலாக்கியது ஒன்று. மற்றொன்று, எதிர்காலத்தில் கச்சா எண்ணெயின் விலை உயரும்பொழுது கூடுதலாக வரி வருவாய் கிடைப்பதையும் உத்தரவாதப்படுத்தியிருக்கிறது.

ஏகாதிபத்திய முதலீட்டாளர்களின் முழுநம்பிக்கையைப் பெறுவதுதான் இந்த அரசின் இலட்சியமாக இருக்கிறது. அதற்கேற்றபடி வங்கித் துறை, காப்பீடு துறை, ரயில்வே துறை, பாதுகாப்புத் துறை என கேந்திரமான துறைகள் அனைத்திலும் தனியார்மயம் கிடுகிடுவென புகுத்தப்படுகிறது. காப்பீடு துறையில் 49 சதவீதம் அளவிற்கு அந்நிய நேரடி முதலீடை அனுமதிக்கும் முடிவை முந்தைய காங்கிரசு அரசே எடுத்திருந்தது. அதற்குப் பின்வந்த மோடியோ அந்நிய நிதி நிறுவன முதலீட்டாளர்களும் காப்பீடு துறையில் முதலீடு செய்வதற்கு ஏற்ப அத்துறையைச் சூதாடிகளுக்குத் திறந்து விடுகிறார்.

தனியார்மயம் என்பதே பொதுச் சொத்துக்களை ஏகாதிபத்திய முதலாளிகளும், உள்ளூர் தரகு முதலாளிகளும் கொள்ளையடிப்பதற்கான ஏற்பாடுதான் - அச்சொத்து அலைக்கற்றையாகவோ, நிலக்கரி வயலாகவோ, பொதுத்துறை நிறுவனங்களாகவோ இருக்கலாம். மைய - மாநில அரசுகள், அதிகார வர்க்கம், அரசியல்வாதிகள் ஆகியோர் இக்கொள்ளைக்கு ஏற்பாடு செய்து கொடுக்கும் மாமா வேலையைத்தான் கௌரவமாகவும் சட்டபூர்வமாகவும் செய்து கொடுக்கின்றன. அந்த வகையில் நரேந்திர மோடி கார்ப்பரேட் முதலாளிகளின், முதலீட்டாளர்களின் மனம் கவர்ந்த மாமாவாக இருக்கிறார். தனது முதல் பட்ஜெட்டிலேயே நல்ல இலாபத்தில் இயங்கிவரும் ஓ.என்.ஜி.சி., கோல் இந்தியா உள்ளிட்ட பல நிறுவனங்களின் பங்குகளைத் தனியாரிடம் விற்கும் முடிவை அறிவித்திருந்த மோடி அரசு, இப்பொழுது நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாரிடம் தாரைவார்க்கும் முடிவை தடாலடியாக எடுத்திருக்கிறது.

கடந்த இருபது ஆண்டுகளில் மாடர்ன் பிரட், வீ.எஸ்.என்.எல்., பால்கோ எனப் பல பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டுள்ளன. அந்நிறுவனங்கள் தனியார் வசமான பின்னே வேலையிழப்புதான் தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சினையாக உருவெடுத்தது. சென்னை-கிண்டியில் அமைந்திருந்த இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன்பு தனியார்மயமாக்கப்பட்டது. இப்பொழுது அந்நிறுவனம் இருந்த இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு இருக்கிறது. அங்கு வேலை பார்த்து வந்த தொழிலாளர்களும், ஊழியர்களும் கறிவேப்பிலையைப் போல தூக்கி எறியப்பட்டார்கள் என்பதுதான் வரலாறு. நமக்குப் பொதுத்துறை நிறுவனமாகத் தெரிவது தரகு முதலாளிகளின் கண்களுக்கு ரியல் எஸ்டேட்டாகத் தெரிகிறது என்பதுதான் உண்மை. ஆனால், நிதியமைச்சர் அருண் ஜேட்லி, ''நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களின் வேலையைப் பாதுகாப்பதற்காகவே அவற்றைத் தனியார்மயமாக்க முடிவு செய்திருப்பதாக''க் கூசாமல் புளுகி வருகிறார்.

தொழிற்சாலைகளைக் கண்காணித்து முறைப்படுத்தும் சட்டங்கள் திருத்தப்படுகின்றன. வரி ஏய்ப்பில் ஈடுபடும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட பின்தேதியிட்டு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு கைவிடப்படுகிறது. இதுவரை இருந்து வந்த வணிக வரிச் சட்டங்கள் கைவிடப்பட்டு, அதனிடத்தில் பொருள் மற்றும் சேவை வரி என்ற புதிய சட்டம் கொண்டுவரப்படுகிறது. தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தும் முயற்சி தீவிரப்படுத்தப்படுகிறது. இத்திருத்தங்கள் மூலம் முதலீட்டாளர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த ''இன்ஸ்பெக்டர் ராஜ்''-க்கும், சிவப்புநாடா முறைக்கும் முடிவு கட்டுவதாக அறிவிக்கிறது, மோடி அரசு. கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் மீது அரசிற்கு இருந்துவந்த பெயரளவிலான கட்டுப்பாடுகளும், கண்காணிக்கும் உரிமையும் கைவிடப்படும் அதே வேளையில், மக்கள் மீதான கண்காணிப்போ ஆதார் அட்டை உள்ளிட்டுப் பல்வேறு வழிகளில் தீவிரமடைகிறது.

''எட்டப்பனை நல்லவனாக்கிவிட்டார் எனது அருமை நண்பர் தொண்டைமான்'' - இது வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் வந்துள்ள புகழ்பெற்ற வசனம். மோடியின் ஆட்சி அந்த வசனத்தைத்தான் நினைவுபடுத்துகிறது. எட்டப்பனிடத்தில் மன்மோகன்சிங், தொண்டைமான் இடத்தில் நரேந்திர மோடி என்பதுதான் வேறுபாடு.

● அழகு

## 2ஜி ஊழல்:

# பார்ப்பனக் கும்பலின் இரட்டை நாக்கு!

**2ஜி, நிலக்கரி வயல், கருப்புப் பண விவகாரங்களை பா.ஜ.க.வும் ஊடகங்களும் அளவுக்கு அதிகமாக ஊதிப் பெருக்கிவிட்டன என ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறது, இந்தியா டுடே.**

கருப்புப் பண விவகாரத்தில் மோடி அரசு அடித்த பல்டியை முட்டுக் கொடுக்க முன்வந்த துக்ளக் சோ, ''இவ்விவகாரத்தில் முந்தைய காங்கிரசு அரசு கூறியதையெல்லாம் நம்பாமல், அக்கட்சிக்கு நாம் அநீதி இழைத்து விட்டதாக''த் தனது ஏட்டில் தலையங்கமே எழுதி முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார். இதேபோல நரேந்திர மோடியின் ஊதுகுழல்களுள் ஒன்றான இந்தியா டுடே இதழ், 2ஜி, நிலக்கரி ஊழல்களையும், கருப்புப் பண விவகாரத்தையும் ஆர்வக்கோளாறின் காரணமாக ஊடகங்கள் ஊதிப்பெருக்கிவிட்டதாகக் குறிப்பிட்டு கட்டுரையொன்றை வெளியிட்டிருக்கிறது. பார்ப்பன-பாசிச கும்பல் தனது சுயநலனுக்காக எப்படி வேண்டுமானாலும் புரட்டிப் பேசும் தன்மையும் வரலாறும் கொண்டது என்பதற்கு இவை மற்றுமொரு ஆதாரமாக அமைந்து விட்டன.

காங்கிரசு தலைமையில் நடந்து வந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கே.ஜி. எண்ணெய் வயல் முறைகேடு, ஏர்-இந்தியா ஊழல், டெல்லி விமான நிலைய ஊழல், 2ஜி முறைகேடு, நிலக்கரி வயல் முறைகேடு உள்ளிட்டுப் பல முறைகேடுகளும் ஊழல்களும் நடந்திருந்தபோதும், பார்ப்பன ஊடகங்களும், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலும் 2ஜி அலைக்கற்றை முறைகேடை மட்டுமே உள்நோக்கத்தோடு உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டன. அலைக்கற்றை ஊழலை தி.மு.க.வைத் தாக்கித் தனிமைப்படுத்துவதற்குக் கிடைத்த ஆயுதமாகக் கண்ட அக்கும்பல், இதனை மற்ற ஊழல்களைவிடப் பிரம்மாண்டமானதாக ஊதிப் பெருக்கியது. அதனாலேயே, சி.ஏ.ஜி. அறிக்கையில் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ஏற்பட்ட இழப்பு குறித்து மூன்றுவிதமான மதிப்பீடுகள் சொல்லப்பட்டிருந்தாலும், 1.76 இலட்சம் கோடி ரூபாயை முன்வைத்துப் பிரச்சாரம் நடத்தியது.

மன்மோகன் சிங்கின் பரிசுத்த பிம்பத்தை உடைப்பதற்கு நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகளைக் கையில் எடுத்துக் கொண்ட பா.ஜ.க., இந்த ஒதுக்கீடு குறித்து சி.பி.ஐ., விசாரிக்க வேண்டும் என மைய ஊழல் கண்காணிப்பு கமிஷனரிடம் புகார் கொடுத்தது. மேலும், மன்மோகன் சிங் அரசு பதவி விலக வேண்டும் என்றும் கோரி, தொடர்ந்து 13 நாட்களுக்கு நாடாளுமன்றத்தை முடக்கியது.

2009-ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப் பட்ட அத்வானி, கருப்புப் பண விவகாரத்தை முன்வைத்து இரத யாத்திரை நடத்தினார். அத்தேர்தல் சமயத்தில் பா.ஜ.க. சார்பாக அமைக்கப்பட்ட பொருளாதார வல்லுநர் குழு, இந்தியர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணம் குறித்து அறிக்கையொன்றை தயாரித்து வெளியிட்டது. 2014 நாடாளுமன்றத் தேர்தல்களின்பொழுது கருப்புப் பணத்தை மீட்கும் கதாநாயகனாக மோடி முன்னிறுத்தப்பட்டார். ஊழலுக்கு எதிராகவும் கருப்புப் பணத்தை மீட்பது தொடர்பாகவும் அவரும் பா.ஜ.க.வும் அடித்த பஞ்ச் டயலாக்குகள், தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார்களைக்கூட கூச வைத்தன.

2ஜி ஊழலை ஊடகங்கள் ஊதிப் பெருக்கவிட்டதாக ஒப்புக் கொண்டுள்ள இந்தியா டுடே குழுமத்தின் துணைத்தலைவர் சேகர் குப்தா: காலங்கடந்த ஞானோதயத்தின் காரணமென்னவோ?




பா.ஜ.க. மற்றும் மோடியின் இந்த ஊழல் எதிர்ப்பு, கருப்புப் பண மீட்பு சவடால்களெல்லாம் ஓட்டுப் பொறுக்கும் சுயநல உள்நோக்கத்திற்கு அப்பாற்பட்டு, வேறு எதையும் சாதிக்காது எனப்

புரட்சியாளர்களும் ஜனநாயக சக்திகளும் அம்பலப்படுத்தினாலும், மோடிக்காக கார்ப்பரேட் ஊடகங்கள் முனைந்து நடத்திய மிருகத்தனமான பிரச்சாரத்தின் மூலம் இவையெல்லாம் அமுக்கப்பட்டன.

எனினும், கார்ப்பரேட் ஊடகங்களால் மோடிக்குப் பூசப்பட்ட அரிதாரமெல்லாம் ஆறே மாதங்களில் கலைந்துபோனது. கருப்புப் பண விவகாரத்தில் காங்கிரசே கேலிபேசும் அளவிற்கு மோடி கும்பல் படுகேவலமான பல்டி அடித்திருக்கிறது. நிலக்கரிச்சுரங்க விவகாரமோ விநோதமான முடிவை எட்டிவிட்டது. வாஜ்பாயி ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட சுரங்கங்களையும் உள்ளிட்டு 214 சுரங்க ஒதுக்கீடுகளை ரத்து செய்து உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்த மறுநிமிடமே, அச்சுரங்கங்களை உடனடியாக மறுஏலம் நடத்தித் தனியாருக்கு கைமாற்றிவிடுவதற்கு ஏதுவாகப் புதிய சட்டமொன்றையே இயற்றிவிட்டது, மோடி அரசு. பா.ஜ.க. மட்டுமல்ல, 2ஜி, சுரங்க வயல் ஒதுக்கீடுகளில் நடந்த முறைகேடுகள் மற்றும் கருப்புப் பண விவகாரத்தை முன்வைத்து ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியைக் கிழிகிழியென கிழித்துவந்த ஊடகங்களும் தட்டைத் திருப்பிப் போட்டு தட்டத் தொடங்கிவிட்டன.

அன்னா ஹசாரே தலைமையில் நடத்தப்பட்ட ஊழலுக்கு எதிரான இந்தியா இயக்கத்தைத் தயாரித்து வழங்கியதில் ஆர்.எஸ்.எஸ்.-க்கு இணையான பங்கு கார்ப்பரேட் பத்திரிகைகள், தொலைக்காட்சிகளுக்கும் உண்டு. அந்த நாடகத்திற்கு மிகப் பெரும் விளம்பரத்தை அளித்த ஊடகங்களுள் ஒன்றான இந்தியா டுடே குழுமம், காங்கிரசு ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களை ஆர்வக்கோளாறு காரணமாக ஊடகங்கள் மிகைப்படுத்திவிட்டதாக இப்பொழுது ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.-இன் அதிகாரபூர்வமற்ற பத்திரிகையாகச் செயல்பட்டுவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் முன்னாள் தலைமை ஆசிரியரும், இந்தியா டுடே குழுமத்தின் துணைத் தலைவருமான சேகர் குப்தா இந்த ஊழல்களை தற்பொழுது இப்படி மதிப்பீடு செய்கிறார்:



‘‘கருப்புப் பண விவகாரத்தில் காங்கிரசு மீது வீணாகச் சந்தேகப்பட்டு அதற்கு அநீதி இழைத்து விட்டோம்’’ எனக் கூறி பா.ஜ.க.வின் பல்டியை நியாயப்படுத்துகிறார், துக்ளக் சோ.

‘‘2ஜி ஸ்பெக்டரம் விவகாரத்தில் சி.ஏ.ஜி. ரூ.57,000 கோடி முதல் ரூ.1.76 இலட்சம் கோடி வரை பல்வேறு எண்ணிக்கையை, ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்பாகக் குறிப்பிட்டபோது, எல்லோரும் அதிகபட்ச தொகையைத் தேர்வு செய்தனர். மீடியா இதிலிருந்து கொஞ்சம் விடுபடத் தொடங்கிவிட்டது.’’ (இந்தியாடுடே, நவ.12)

ஆ.ராசா பதவி விலகிய பிறகு நடந்த அலைக்கற்றை ஏலங்களின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானமே, மீடியாக்கள் அலைக்கற்றை ஊழல் குறித்து உருவாக்கி வைத்திருந்த 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு என்ற அனுமான பூதத்தை அடித்து நொறுக்கிவிட்டது. ஆனாலும், ஊடகங்கள் தங்களது குட்டு உடைந்து போனதை கமுக்கமாக மூடிமறைத்ததோடு, 2ஜி ஒதுக்கீடில் மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டதைப் போலவே நாடாளுமன்றத் தேர்தல்கள் முடியும் வரை பிரச்சாரம் செய்துவிட்டு, இப்பொழுது யோக்கியவானைப் போல, ‘‘2007-இல் ரூ.1.76 இலட்சம் கோடி என்பது ஜிடிபியில் 4.4 சதவீதம். சிறிய அளவு ஸ்பெக்ட்ரம்மின் மதிப்பு இந்த அளவுக்கு இருக்குமா என்று யோசித்துப் பாருங்கள்’’ என எழுதுகின்றன.

இந்தியா டுடேயின் இந்த திடீர் ஞானோதயம் 2ஜி-யோடு மட்டும் நின்றுவிடவில்லை. ‘‘நிலக்கரியும் நல்ல உதாரணம். 2ஜி ஸ்பெக்ட்ரம், காமன்வெல்த் போட்டிகள் மற்றும் இதர விசயங்களில் நடந்தது போல நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டிலும் ஐ.மு.கூ. அரசில் ஊழல் இருந்திருக்கிறது. ஆனால், ஒவ்வொரு ஒதுக்கீடும் முறைகேடானதா? மீண்டும் கொஞ்சம் பூஜ்யங்களைச் சேர்த்துக் கொள்வதால் என்ன தப்பு என்பது போல சி.ஏ.ஜி.

பூஜ்ஜியங்களின் எண்ணிக்கையைக் காட்டியே, 2ஜி ஊழலைப் பரபரப்பூட்டும் செய்தியாக்கின ஊடகங்கள்.



Chennai
Thursday, November 11, 2010

The New Indian Express

World | Page 14
Suu Kyi wants unconditional release: lawyer

Sport | Page 18

LOSS TO THE NATION

₹1760000000000

A Raja deprived govt of this much money in 2G spectrum allocation: CAG report

INSTANT JUSTICE

House divide... on 'encounte... killing' of rap...

Govt defends police act... finds support only in Co...

சொன்ன சில இலட்சம் கோடி தொகை கற்பனையானதா? தே.ஜ.கூ., குறிப்பாக பா.ஜ.க. அதிகபட்ச தொகையைத் தேர்வு செய்தது. இதன் விளைவாக, நிலக்கரி வயல் ஒதுக்கீடு வழக்கில் 1993 முதல் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடுகள் ரத்து செய்யப் படுவதைச் செய்வதறியாமல் பார்த்துக் கொண்டிருந்தது'' என பிலாக்கணம் பாடு கிறார், சேகர் குப்தா. (இந்தியா டுடே, நவ.12)




2ஜி ஒதுக்கீடு விவகாரத்தில் மன்மோகன் சிங்கை ஆ.ராசா ஏமாற்றிவிட்டதைப் போல அவதூறு செய்து ஊடகங்கள் வெளியிட்ட கேலிச்சித்திரப் படத்தின் ஒரு வகை மாதிரி.

ஊழல் விவகாரம் போலவே கருப்புப் பண விவகாரமும் மிகைப்படுத்தப்பட்ட தாக ஒப்புக் கொண்டுள்ள சேகர் குப்தா, ''கருப்புப் பணம் தொடர்பான எண்ணிக் கையை நடைமுறை சாத்தியம் எனும் சோதனைக்கு (யாரும்) உட்படுத்த வில்லை. இது ஜிடிபியைவிட பல மடங்கு அதிகமானது என்றும், சுவிஸ் வங்கியில் இவை முடங்கிக் கிடக்கிறது என்றும் பாபா ராம்தேவ் மட்டுமே கூறமுடியும். இதைத்தனது தேர்தல் பிரச்சாரத்தின் மைய மாக்குவதற்கு முன்பாக, ஆட்சிக்கு வரும் வாய்ப்பு உண்மையில் இருக்கிறது என்றும், இது உருவாக்கிய பூதத்தை சமாளித்தாக வேண்டிய நிலை ஏற்படும் என்றும்நினைவில் கொள்ள யாரேனும் பா.ஜ.க.விற்கு அறிவுறுத்தியிருக்கலாம். உங்கள் சொந்த கற்பனையில் சிக்கித் தவிப்பதைவிட தர்மசங்கடமானது வேறில்லை'' என அடக்கி எழுதுகிறார்.

கருப்புப் பண விவகாரத்தில் சேகர் குப்தாவைவிட துக்ளக் சோவின் மழுப்பல்கள், மோடியின் 'தர்மசங் கடத்தை' நமக்கு இன்னும் தெளிவாக விளங்க வைக் கின்றன. ''கருப்புப் பணத்தை அயல்நாட்டு வங்கிகளில் வைத்திருப்போரின் பட்டியலை மத்திய காங்கிரஸ் அரசு பெற்றும்கூட, அதை வெளியிடாமல் இருந்ததற்குச் சில காரணங்களை அந்த அரசு கூறியது. அவை பொய்கள் என்று தீர்மானித்து, அந்த அடிப்படையில் அப்போது மத்திய அரசை விமர்சனம் செய்தவர்களில் நாமும் அடங்குகிறோம்.

இப்போது அந்தக் காரணங்களில் சிலவற்றை பா.ஜ.க. அரசும் கூறுகிறபோது - இன்றைய சூழ்நிலை யில் நமக்கு அந்தக் காரணங்களை ஏற்கத் தோன்றுகிறது. காங்கிரஸ் சரியாக விளக்காததாலோ, விவரங்கள் சரியாக வெளியாகாததாலோ, காங்கிரஸ் கூறுகிற எதுவுமே நிஜ மாக இருக்காது என்ற நமது சந்தேகத்தினாலோ - அன்று காங்கிரஸ் கூறிய காரணங்களை நாம் நிராகரித்தோம். அந்தப் பட்டியலில் காங்கிரஸுக்கு வேண்டியவர்கள் - காங்கிரஸ்காரர்களேகூட - இருக்கலாம்; ஆனால் அதனுடன் கூடவே அயல்நாட்டு ஒப்பந்தங்கள் என்ற சிக்கலும் இருந்திருக்கிறது. அதைக் காங்கிரஸ் கூறுகிற நொண்டிச் சாக்காக நினைத்து ஒதுக்கியது நமது தவறு; நம்மால் காங்கிரஸுக்கும், அன்றைய மத்திய அரசுக்கும் இழைக்கப்பட்ட அநீதி அது.'' (துக்ளக், 12.11.2014)

''காங்கிரசு சரியாக விளக்கவில்லையாம், விவரங்கள் சரியாக வெளியாகவில்லையாம்'' - ராமஸ்வாமி அய்யர் எப்படியெல்லாம் நாக்கூசாமல் பொய் சொல்கிறார் பாருங்கள். கருப்புப் பண விவகாரத்தில் காங்கிரசுக்கு இழைக்கப்பட்ட அநீதி கிடக்கட்டும். இதில் மக்களுக்குச் சாத்தப்பட்ட பட்டை நாமத்தைப் பற்றி யல்லவா யோக்கியவான் சோ ராமஸ்வாமி பேசியிருக்க வேண்டும்; மன்னிப்புக் கோரியிருக்க வேண்டும். மாறாக, கருப்புப் பண விவகாரத்தில் இரட்டை வரி விதிப்பு போன்ற நடைமுறை 'சிக்கல்கள் ' இருப்பது இப்பொழுதுதான் தெரியவந்தது போல நடிக்கிறார்கள்.

முன்னாள் தலைமை தணிக்கை அதிகாரி வினோத் ராய்தான், 2ஜி விவகாரம் குறித்து பேட்டிகள் அளித்து, அதனை பா.ஜ.க.விற்கும் ஊடகங்களுக்கும் பெருந்தீனி யாகக் கொடுத்தார். இதற்குக் கைமாறாக பா.ஜ.க.வும் ஊடகங்களும் விநோத் ராயை ஊழலை ஒழிக்க வந்த ஹீரோவாகத் தூக்கி வைத்துக் கொண்டாடின. அப்படி பட்ட ஊடக வெளிச்சத்தில் மிதந்த விநோத் ராய், ''தணிக்கை துறை பல முறைகேடுகள் குறித்து அறிக்கை அளித்திருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சிகள்தான் திட்ட மிட்ட நோக்கத்தோடு ஒன்றிரண்டை மட்டும் எடுத்துக் கொண்டு பெரிதுபடுத்துகின்றன'' என சம்பந்தமில்லாத மூன்றாவது நபர் போல இப்பொழுது 2ஜி குறித்து கருத்துத் தெரிவிக்கிறார். (என்.டி.டிவி பேட்டி)

நிதியமைச்சர் நாற்காலியைப் பிடித்துவிட்ட அருண் ஜேட்லி, ''கணக்கு தணிக்கை அதிகாரிகள் கணக்குகளை மட்டுமே தணிக்கை செய்ய வேண்டும். அவை பத்திரி கைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவர வேண்டும் என்பதற்கு முயற்சிக்கக் கூடாது'' என இப்பொழுது எச்சரிக்கிறார். (துக்ளக், 19.11.2014)

இந்தப் பித்தலாட்டத்தனங்கள் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விக்கு, ''நாம் ஆட்சிக்கு வந்தால் இந்தப் பிரச்சினையில் என்ன அணுகுமுறையைக் கையாள்வோம் என யோசித்துவைத்துக் கொண்டா ஒரு எதிர்க்கட்சி செயல்படுகிறது. இது எல்லாஜனநாயக நாடுகளிலும் நடக்கிற தமாஷ்தான்'' எனப் பதில் அளிக்கிறார், துக்ளக் சோ. (துக்ளக், 19.11.2014)

''அரசியலில் ஓரளவு மிகைப்படுத்தலை, அதிலும் குறிப்பாக தேர்தல் நேரத்தில் இந்தச் செயலை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், இவை நினைத்துப் பார்க்க முடியாத அளவை அடையும்போதுதான் சிக்கல் வருகிறது'' எனத் தந்திரமாக எழுதி, ஊடகங்களையும் பா.ஜ.க.வையும் விடுவிக்க முயலுகிறார், சேகர் குப்தா. (இந்தியாடுடே, நவ.12)

முன்பு தாங்கள் சொன்னவற்றுக்கு, நடந்து கொண்டதற்குப் பொறுப்பெடுத்துக் கொள்ளாமல், அதனைத் தமாஷாகப் பார்க்க வேண்டும் என அத்துவிட்டுப் பேசுவதற்கு எத்துணை கொழுப்பு இருக்க வேண்டும்! இப்படிபட்ட இரட்டை நாக்கு கொண்ட பார்ப்பனக் கும்பல், தம்மை தார்மீகப் பொறுப்பின் காவலனாகச் சித்திரித்துக்கொண்டு ஊருக்கு உபதேசம் செய்வதுதான் உண்மையிலேயே தமாஷானது. ஆட்சியைப் பிடித்த பிறகு ஊழல், கருப்புப் பணம் என்பனவற்றையெல்லாம் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமுமில்லை. கார்ப்பரேட் முதலாளிவர்க்கமும் அதனை விரும்பப் போவதில்லை என்பதால்தான் சோவும், சேகர் குப்தாவும் அவை குறித்து புதிய பொழிப்புரையை எழுதுகிறார்கள். ஊழலையும் கருப்புப் பணத்தையும் ஒழிக்கவந்த மாவீரனைப் போலக் காட்டப்பட்ட மோடியும், அவரது பரிவாரங்களும் அடிப்படையிலேயே நாணயமற்றவர்கள்; இரட்டைநாக்குப் பேர்வழிகள் என்பதுதான் இந்தப் பொழிப்புரையிலிருந்து ஓட்டுப்போட்ட பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டிய விடயமாகும்.

● திப்பு

# கார்ப்பரேட் கம்பெனிகளின் இலாபத்துக்காகவே மின்வாரியத்தின் நட்டம்!

பால் விலை உயர்வை அடுத்து எந்நேரத்திலும் மின்கட்டண உயர்வு தமிழக மக்களின் தலையில் இறங்கக் காத்திருக்கிறது. கொஞ்ச நஞ்சமல்ல, ஏறத்தாழ 6,805 கோடி ரூபாய்க்கான கட்டண உயர்வினை அறிவித்திருக்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இது குறித்துத் தமிழகத்தின் மூன்றே மூன்று நகரங்களில் மட்டும் கருத்துக் கேட்புக் கூட்டம் என்ற நாடகத்தையும் நடத்தி முடித்துவிட்டது. தமிழகத்திலுள்ள பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், இந்தக் கட்டண உயர்வின் பெரும்பகுதியைத் தமிழக மக்களும், சிறு உற்பத்தியாளர்களும்தான் சுமக்க வேண்டியிருக்கும். அதுவும் சென்னை உள்ளிட்ட நகர்ப்புறங்களில் வாடகை வீட்டில் வசித்து வரும் குடும்பங்கள் மீது விழப்போகும் மின் கட்டண சுமை அச்சமூட்டக்கூடியதாகவே இருக்கும்.

சென்னை, நெல்லை, ஈரோடு ஆகிய மூன்று நகரங்களில் ஆணையம் நடத்திய கருத்துக் கேட்பு கூட்டங்களில், மனித உரிமைப் பாதுகாப்பு மையம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் இக்கட்டண உயர்வின் பின்னே உள்ள தனியார்மய பகற்கொள்ளையை அம்பலப்படுத்தியது, அதற்குப் பொதுமக்கள் பெருத்த ஆதரவைத் தந்தது மற்றும் இக்கட்டண உயர்வுக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு ஆகியவை காரணமாக இக்கட்டண உயர்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.6,854 கோடி ரூபாயாக இருக்குமென்றும், அதனை ஈடு செய்யவே இந்த கட்டண உயர்வை அறிவித்திருப்பதாக ஆணையம் விளக்கமளித்திருக்கிறது. ஜெயா முதல்வராகப் பதவியேற்றவுடனேயே மின்சாரத் துறையை முந்தைய தி.மு.க. அரசு நட்டத்தில் தள்ளவிட்டதாகக் குற்றஞ்சுமத்தி, அதனை ஈடு செய்ய 37 சதவீதக் கட்டண உயர்வைச் சுமத்தினார். அதன் பிறகும் நட்டம் குறையவில்லையென்றால், அதற்கு என்ன காரணம், யார் பொறுப்பு என்ற கேள்விகளுக்கு ஆணையமும் விளக்கம் அளிக்கவில்லை; ஜெயாவின் பினாமி அரசும் பதில் தரவில்லை.

தமிழக மின்சார வாரியம் இதற்கு முன்பு நட்டமும் அடைந்திருக்கிறது, இலாபமும் சம்பாதித்திருக்கிறது. அப்பொழுது ஏற்பட்ட நட்டத்திற்கு மின் கடத்தலில் ஏற்படும் இழப்பு, மின்திருட்டு, அதிகாரிகளின் ஊழல் உள்ளிட்டுப் பல காரணங்கள் இருந்தன. அந்தக் காரணங்கள் இப்பொழுதும் நீடித்தாலும், மின் வாரியம் தற்பொழுது சந்தித்து வரும் நட்டம் அதன் தன்மையிலேயே வேறானது. காட் ஒப்பந்தம் கையெழுத்தானதையடுத்து மின்சார உற்பத்தியில் தனியார் அனுமதிக்கப்பட்டு, அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அதிகவிலை கொடுத்து வாங்குவதற்கு ஏற்பச் சட்டமியற்றப்பட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்குக்

குறைந்த விலையில் தடையற்ற மின்சாரம் வழங்க ஒப்பந்தங்கள் போடப்பட்டு என்ற இந்த நச்சுச்சூழல்தான் தமிழக மின்வாரியத்தை 2001-02 ஆம் நிதியாண்டிலிருந்து தொடர்ந்து நட்டத்தைச் சந்தித்து வரும் கட்டமைப்பு நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. அதனால்தான் எத்துணை முறை கட்டண உயர்வை அறிவித்தாலும், இந்த நட்டம் தொடர்கதையாகிவிட்டது.



தனியார் மின்உற்பத்தியாளர்கள், அவர்கள் போட்டுள்ள மூலதனத்தை நான்கே ஆண்டுகளில் எடுத்துவிடும்படி அவர்களிடமிருந்து பெறப்படும் மின்சாரத்திற்குக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும். இதற்கு அப்பால், அவர்களுக்குத் திறன் கட்டணம் என்ற பெயரில் ஆண்டுதோறும் தனியாக மொய் எழுத வேண்டும் என மின்சாரச் சட்டம் வரையறுக்கிறது. இப்படிபட்ட தனியாருக்குச் சாதகமான, மக்களுக்கு அநீதியான சட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்ட மின்வாரியங்கள் இலாபத்தில் இயங்குவதற்கான சாத்தியமுண்டா? மேலும், இச்சட்டம் மின்சாரத்தை மானிய விலையில் வழங்கக்கூடாது என்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மின் உற்பத்திச் செலவுக்கேற்ப அதன் கட்டணத்தை மாற்றியமைக்கும் அதிகாரத்தை ஒழுங்குமுறை ஆணையத்திடம் வழங்குகிறது. இதன் பொருள், மின் வாரியம் நட்டத்தில் இயங்கினாலும், இலாபத்தில் நடந்தாலும் ஆண்டுதோறும் கட்டண உயர்வு தவிர்க்க முடியாது என்பதுதான்.

தமிழக மின்வாரியம் தமிழகத்திலுள்ள தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து ஒரு யூனிட் மின்சாரத்தை அதிகபட்சமாக பத்து ரூபாய் கொடுத்து வாங்குகிறது. இது தவிர்த்து, தனது சொந்த மின் நிலையங்கள், மைய அரசுக்குச் சொந்தமான மின் நிலையங்களிடமிருந்தும் மின்சாரத்தைப் பெறுகிறது. இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு யூனிட் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு ரூ.6.14 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், தமிழகத்தில் இயங்கி வரும் 29 கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை ஐந்து ரூபாய்க்கு விற்கிறது, மின் வாரியம்.

இந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் தமக்குத் தேவையான மின்சாரத்தை நேரடியாகத் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தோ, தேசியத் தொகுப்பிலிருந்தோ பெற்றுக்கொள்ள கம்பித் தடங்களைப் பெற்றிருக்கும் பொழுது, தமிழக மின்வாரியம் இவர்களுக்குப் பத்து ரூபாய் மின்சாரத்தை ஐந்து ரூபாய் மானிய விலையில் வழங்க வேண்டிய அவசியமோ, அதனால் ஏற்படும் நட்டத்தைச் சுமக்க வேண்டிய தேவையோ கிடையாது. ஆனாலும், தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு என்ற போர்வையில் கார்ப்பரேட் நிறுவனங்களின் இலாபத்திற்காக மின் வாரியத்தை நட்டத்தில் தள்ளிவிடுகிறார்கள், ஆட்சியாளர்கள். மின் வாரியத்தின் நட்டம் மின் கட்டண உயர்வாகத் தமிழக மக்களின் மீது சுமத்தப்படுகிறது.

ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் தமிழகத்தை மின்வெட்டு இல்லாத மாநிலமாக மாற்றுவோம் எனச் சவடால் அடித்த ஜெயாவின் இந்த மூன்றரை ஆண்டு கால ஆட்சியில் தமிழகத்தின் மின் பற்றாக்குறை தீர்ந்தபாடில்லை. அதேசமயம் இந்த மின்பற்றாக் குறையைக் காட்டி வெளிமாநிலங்களிலுள்ள வணிக மின் உற்பத்திக் கழகங்களிடமிருந்து 3,800 மெகாவாட் மின்சாரத்தை வாங்கும் நீண்ட கால ஒப்பந்தங்களை கடந்த ஆகஸ்டு மாதம் போட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கும் ஒப்பந்தங்களின் காலத்தையும் நீட்டித்து வருகிறது. இவற்றுக்கெல்லாம் ஏற்ப, தமிழகத்தில் கட்டப்படும் அரசுத் துறை மின் உற்பத்தித் திட்டங்கள் ஆமை வேகத்தில் நகர்த்தப்படுகின்றன. தமிழக மின்வாரியம் தொடர்ந்து நட்டத்தைச் சந்தித்து வருவதற்கும், மின் கட்டண உயர்வு வாடிக்கையாகி விட்டதற்கும் பின்னால் உள்ள உண்மைகள் இவைதான்.

● சுடர்

மின் கட்டண உயர்வு குறித்து ஈரோட்டில் நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலகத்தில் இறங்கிய பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர்கள்.



# இலக்கு வைத்து அரசே நடத்தும் கொலைகளும் கொள்ளைகளும்!

**“டாஸ்மாக்” – சாராயக் கடைகளுக்கு, மின் வாரிய வசூல் மையங்களுக்கு, “பிரீமியம்” ரயில்களுக்கு இவ்வளவு தொகை “கல்லாக் கட்ட வேண்டும்” என்று தான்தோன்றித்தனமாக ஒரு இலக்கு வைத்து அரசே கொள்ளையிடுவது – வழிப்பறி செய்வது பற்றிய செய்தி விமர்சனம் எழுதுவதற்கு எண்ணினோம்; ஆனால், இத்தனை நாட்களில் இத்தனை பேரைக் கொல்வது என்பதாக அரசே இலக்கு வைத்து கொலை செய்யும் ஒரு அதிர்ச்சிச் செய்தி வந்திருக்கிறது.**

நவம்பர் 8 அன்று, சட்டிஸ்கர் மாநிலம், பிலாஸ்பூர் மாவட்டம், பென்டாரி என்ற கிராமத்தில் நடந்த குடும்பக்கட்டுப்பாடு கருத்தடை சிறப்பு முகாமில், 83 பெண்களுக்கான அறுவைச் சிகிச்சை செய்ததில் 13 பெண்கள் மரணமடைந்தார்கள். அடுத்த இரண்டு நாட்களில் அதே மாவட்டத்தில் உள்ள குவரெல்லா கிராமத்தில் நடந்த கருத்தடை சிறப்பு முகாமில், 56 பெண்களுக்கான அறுவைச் சிகிச்சை செய்ததில் ஒரு பழங்குடிப் பெண் மரணமடைந்தார். இவ்விரு முகாம்களிலும் மேலும் பல பெண்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் அம்மாநிலத்தின் வெவ்வேறு மருத்துமனைகளில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

‘‘அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா’’ என்ற வசனம் எல்லா சந்தர்ப்பவாதக் குரூரங்களையும் அரசியல் கிரிமினல் குற்றங்களையும் நகைச்சுவை வேடிக்கையாக்கித் தட்டிக்கழிக்கும் தப்புவிக்கும் விசயங்களாக்கி விட்டதைப் போல, நமது மக்களின் அன்றாடச் சாவுகள் சகஜமாகிவிட்டன. பிழைகளோடு எழுதப்பட்ட காகிதத்தைக் கசக்கிக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடுவதைப் போல இந்தச்சாவுச் செய்திகள் துச்சமாக மதிக்கப்பட்டு, மறந்து போய்விடுகின்றன. உணர்வுகள் மரத்துப் போன இந்தத் ‘‘தேசத்தில்’’ மக்கள் உயிர்களுக்கு இவ்வளவுதான் மதிப்பு! ஆனால், உணர்வுகள் இன்னமும் மரத்துப்போகாத கொஞ்சம் பேருக்கு இந்த சட்டிஸ்கர் மாநிலச் சாவுச் செய்திகள் நெஞ்சைப் பதற வைக்கிறது!

ஏனென்றால், இச்சாவுகள் ஏதோ மருத்துவச் சிகிச்சையின்போது, ‘‘கிரிமினல்’’ அலட்சியத்தால் நேர்ந்துவிட்ட தவறுகள் அல்ல. இவ்வாறான ‘‘சாவுகள்’’ நிகழ்வற்கான எல்லா காரணிகளையும் -அடிப்படைகளையும் மருத்துவ மற்றும் அரசு நிர்வாகமே உருவாக்கி வைத்திருந்தது; இவ்வாறு நிகழ்வதற்கான சாத்தியங்கள் மனித மதிப்பீட்டிற்கு, அதுவும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் மற்றும் நிர்வாகத்தினரின் மதிப்பீட்டிற்கு அப்பாற்பட்டதும் அல்ல. ஆகவே, தெரிந்தே நிகழ்த்திய இச்சாவுகளை ஏன் இலக்கு வைத்து நடத்தப்பட்ட கொலை என்று சொல்லக்கூடாது! அதுவும், இவ்வளவு காலத்துக்குள் இவ்வளவு கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்ய வேண்டும் என்று இலக்கு வைத்து செய்து முடித்த கொலைகள் என்று ஏன் சொல்லக் கூடாது!

பிலாஸ்பூரில் சிறப்பு முகாம்களில் நடத்தப்பட்ட கருத்தடை அறுவைச்சிகிச்சைகள், மக்கட்தொகையை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவது என்ற நோக்கில் மட்டுமல்ல, அங்கு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படும் பெண்களைக் கொலை செய்வதன் மூலம் மக்கள் தொகையைக் குறைப்பதும் நடந்திருக்கிறது. இன்னும் பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ‘‘அங்கு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்ட பெண்களில் எல்லோரும் செத்து விடவில்லை; ஆகவே, இப்படி நடக்கும் என்பது தங்களுக்குத் தெரியாது, நேர்ந்துவிட்ட சாவுகளுக்குத் தாங்கள் பொறுப்பல்லவென்றும்’’ அச்சிறப்பு முகாம்களை ஏற்பாடு செய்தவர்கள் வாதாடவும் கூடும்.

பென்டாரி கிராமத்தில் நடந்த கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பின் உயிருக்கும் போராடும் நிலையில் பிலாஸ்பூர் மருத்துவமனையில் கிடத்தப்பட்டுள்ள இளம் தாய்மார்கள்.



ஆனால், கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் குறித்த முந்தைய அனுபவங்கள் அடிப்படையில் விதிக்கப்பட்ட தடைகள், நெறி முறைகள், வழி காட்டுதல்கள் எல்லாவற்றையும் இலக்கு ஒன்றையே குறியாக வைத்து பிலாஸ்பூர் சிறப்பு முகாம்களில் மீறப் பட்டுள்ளன. இந்த வகையில் அதிகாரிகள், ஆட்சியாளர்களோடு கூட்டுச்சேர்ந்து, தொழில்முறை ''தர்மங்களை-நெறிமுறைகளை'' மீறி மருத்துவர்கள் நடந்து கொண்டுள்ளார்கள். அரசு விருது களையும் பதவி உயர்வுகளையும் பரிசுத்தொகைகளையும் குறிவைத்து போலி மோதல்களை (''என்கவுண்டர்களை'') அரங் கேற்றும் இராணுத்தினர், துணை இராணுவத்தினர், போலீசைப் போல இம்மருத்துவர்கள் கொலைகாரர்களாகச் செயல் பட்டிருக் கிறார்கள்.

''ஓர் உதவியாளரை வைத்துக்கொண்டு ஒரு மருத்துவர், மூன்று 'லேப்ரோஸ்கோப்' கருவிகளைக் கொண்டு ஒருநாளைக்கு முப்பதுக்கும் மேலாக கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தக் கூடாது. மேலும் சில அறுவைச் சிச்சை மருத்துவர்களையும் உதவியாளர்களும் 'லேப்ரோஸ்கோப்' கருவிகளும் இருந்தாலும் ஒரு முகாமில் ஒருநாளைக்கு ஐம்பதுக்கும் மேலாக கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தக்கூடாது'' என்று உச்சநீதிமன்றம் 2008-ஆம் ஆண்டு தடை விதித்திருக்கிறது. (ஏற்கெனவே, இவ்வாறான பல கொலைகள் நடந்திருப்பதால்தான் உச்சநீதி மன்றம் தடை விதிக்க நேர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள்!)

ஆனால், பென்டாரி என்ற கிராம சிறப்பு முகாமில் ஒரேநாளில் 5 மணிநேரத்தில் 83 பெண்களுக்கும், குவரெல்லா கிராம சிறப்பு முகாமில் ஒரே நாளில் 56 பெண்களுக்கும் ஒரே உதவியாளரை வைத்துக்கொண்டு ஒரே மருத்துவர் ஒருநாள் விட்டு ஒரு நாள் அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார். இரத்தப் போக்கோ, தொற்றோ ஏற்படக்கூடாது என்பதற்காக சிறுதுளை போட்டு அறுவைச் சிகிச்சை செய்யும் 'லேப்ரோஸ்கோப்' முறையைப் பயன்படுத்தினாலும், குறித்த நேரத்தில் இத்தனை பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது என்பதால் அக்கருவியைக் கொதிநீரில் கழுவிக்கூட (அப்படி ஒருமுறை செய்வதற்குக் குறைந்தது 20 நிமிடம் பிடிக்கும்) அடுத்தடுத்த பெண்களுக்குப் பயன்படுத்தவில்லை.

இலக்கு வைத்து நடத்தப்பட்ட கருத்தடைக் கொலைகளை எதிர்த்து டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்களும் மகளிர் அமைப்புகளும் இணைந்து டெல்லியிலுள்ள சட்டிஸ்கர் பவன் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம்.





கைது செய்யப்பட்டுள்ள மருத்துவர் டாக்டர் குப்தா.

மூன்றாண்டுகளுக்கு முன்பு கைவிடப்பட்டு பாழடைந்த மருத்துவமனைக் கட்டிடத்தில், படுக்கை வசதிகள் ஏதுமின்றி, தரையில் கிடத்தி, நஞ்சாகிப் போனது 'லேப்ரோஸ்கோப்' கருவியை வைத்துத்தான் அறுவைச் சிகிச்சை கள் செய்யப்பட்டன. இதனால், அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்ட பெண்களுக்கு இரத்தப் பெருக்கு ஏற்பட்டது; சீழ்கட்டியது, வலியால் துடிதுடித்துப்போன அவர்கள் ஒவ்வொருவராக மாண்டுபோனார்கள். காலா வதியாகிபோன மற்றும் கலப்பட மருந்துகளே கொடுக்கப்பட்டன. அதன் பிறகு நடந்த விசாரணையில் மருந்துக் கொள்முதலில் ஊழல்கள் நடந்திருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறன.

ஏன் இவ்வளவு முறைகேடுகள்? ஏன் இவ் வளவு அவசரம்? ஏதுமறியாத ஏழைப் பெண்கள் இப்படிக்கொல்லப்படுவது நிற்குமா? அறி விக்கப்படாத அரசிதழான ''தி இந்து'' எழுது கிறது, ''கருத்தடை செய்து கொள்ளும் பெண் களுக்கு ஈட்டுத்தொகைகள் வழங்குவதும் மற்றும் மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சை எண்ணிக்கைகளுக்கேற்ப ஊதியமளிப்பதும், கருத்தடை இலக்குகளை எட்டுவதற்கான உயிர்க் கொல்லி நிர்ப்பந்தம் இருக்கும் வரை விதிகள் மீறப்படுவதும், மரணங்கள் நிகழ்வதும் வருத்தமளிக்கும் வகையில் நீடிக்கும். இதை மேலும் மோசமாக்குகிறது குழந்தைகள் பிறப்பு, பச்சிளம் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பதின்மர்களின் ஆரோக்கியம் குறித்த 2020 ஆண்டுக்குள் 'ஆயிரமாண்டுகளின் வளர்ச்சி இலக்கு'. இதைச்

சாதிப்பதற்கான வழிவகையாகக் கருத்தடைக்கு மாறுபாடுகளின்றி அரசாங்கம் கவனம் செலுத்துவது இருக்கிறது. 'உயர்கவனத்துக்குரிய பதினோரு மாநிலங்களின்' முதல மைச்சர்களுக்கு சுகாதாரம் மற்றும் குடும்பநல மத்திய அமைச்சகம் 2014, அக்டோபர் 20 அன்று அனுப்பிய கடிதத்தில் இது தெளிவாகத் தெரிகிறது. இம்மாநிலங்களில் கருத்தடை செய்து கொள்ளும் பெண்களுக்கு ஈட்டுத் தொகையும் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களுக்கு ஊதியமும் அதிகரிக்கப்பட்டன. வேறுபிற கருத்தடை முறைகளோடு ஒப்பிடும்போது அறுவைச் சிகிச்சை செய்யும் எண்ணிக்கை ஏற்கெனவே நமது நாட்டில் மிக அதிகமாக இருக்கிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சைக்காகப் பெண்களைத் திரட்டுமாறு அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார ஊழியர்களை (ஆஷா) நிர்ப்பந்திக்கும்போது, அதன் பொருள் இதுதான்: இம்மாநிலங்களில் பாதுகாப்பான கருத்தடை முறைகள் குறித்த ஆலோசனைகளும் தகவல்களும் குறைவான அளவிலேயே வழங்கப்படும்.''

**"அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு வளர்ச்சியடையாத நாடுகளின் கனிம வளங்கள் அதிகரித்த அளவில் தேவைப்படும். இந்நாடுகளில் ஏற்படும் மக்கள் போராட்டங்கள் காரணமாக மூலாதாரங்களை அமெரிக்கா பெறுவது தடைப்படக் கூடும். எனவே, இந்நாடுகளின் மக்கள்தொகையைக் கட்டுக்குள் வைத்திருப்பது அமெரிக்க நலன்களுக்கு முக்கியமானது" என்கிறது, அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு அறிக்கை.**

அழிந்துவிடும் நிலையில் உள்ள பைகா பழங்குடி இனத்தவருக்கு கருத்தடை செய்வது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வினத்துப் பெண்ணுக்கு தடையை மீறி அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு மாண்டுபோனதைப் பற்றிக் கேட்டதற்கு, அவள் ஒப்புதலோடுதான் செய்ததாக மந்திரி சொல்கிறார். இதிலிருந்தே தெரிகிறது, அப்பெண்ணுக்கு என்ன, எப்படிப் பட்ட ஆலோசனைகளும் தகவல்களும் வழங்கப்பட்டிருக்கும் என்பது!

பீகார் மாநிலத்தின் நேபாள எல்லையை ஒட்டியுள்ள கிராமத்தில் 2003-இல் நடந்த கருத்தடை சிறப்பு முகாமின் கோரக் காட்சி. (கோப்புப்படம்)



இந்து ஏடு தரும் செய்தியிலிருந்தே தெரிகிறது: இத்தனை நாட்களில் இத்தனை பேரைக் கொல்வது என்பதாக அரசே இலக்கு வைத்து கொலை செய்தது என்பது கற்பனையோ அல்லது மிகையான குற்றச்சாட்டோ அல்ல, ஆதார பூர்வமான உண்மைதான்!

'உயர் கவனத்துக்குரிய பதினோரு மாநிலங்களில்' ஒன்று தமிழ்நாடு என்பது மட்டுமல்ல, கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட பெண்கள் மாண்டு போவதில் நாட்டிலேயே முதலிடத்தில் இருப்பதும் தமிழ்நாடுதான். பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளிலும், பாலியல் குற்றங்களிலும் கூட முதலிடத்தில் இருப்பதும் தமிழ்நாடு தான். கடந்த ஒரு மாதத்தில் 27 குழந்தைகளைப் பலி கொடுத்து அரசு மருத்துவமனைகளில் பிறந்த பச்சிளங் குழந்தைகள் மூச்சுத்திணறி மாண்டு போவதில் மேற்கு வங்கத்தை விஞ்சி முதலிடத்துக்குப் பாய்வதும் தமிழ்நாடுதான்.

40 ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்கா நிறைவேற்றிய ''உலகளாவிய மக்கள்தொகை வளர்ச்சியால் அமெரிக்கப் பாதுகாப்புக்கும் எல்லை தாண்டிய நலன்களுக்கும் ஏற்படும் பாதிப்புகள்'' என்ற தேசியப் பாதுகாப்பு ஆய்வறிக்கை (NS-SM 200) பின்வரும் செய்தியைச் சொல்லுகிறது. ''அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு வளர்ச்சியடையாத நாடுகளின் கனிம வளங்கள் அதிகரித்த அளவில் தேவைப்படும். இந்நாடுகளில் ஏற்படும் மக்கள் போராட்டங்கள் மற்றும் வன்முறைகள் காரணமாக வளங்களையும் மூலாதாரங்களையும் அமெரிக்கப் பொருளாதாரம் பெறுவது தடைப்படக் கூடும். எனவே, இந்நாடுகளின் மக்கள் தொகையைக் கட்டுக்குள் வைத்திருப்பது அமெரிக்க நலன்களுக்கு முக்கியமானது'' என்கிறது, அந்த அறிக்கை.

மக்கள்நலத் திட்டங்களைக் காட்டிலும் அதிகமாகக் கருத்தடைத் திட்டங்களுக்கு இந்திய அரசு செலவிட்டிருக்கிறது. ஏகாதிபத்திய மற்றும் கார்ப்பரேட் தரகு முதலாளிகளின் பொருளாதார நலன்களுக்காக இலக்கு வைத்து நமது நாட்டுப் பெண்களின் கருப்பைகளை நச்சுக் கருவிகளைக் கொண்டு அறுக்கிறார்கள், அரசும் ஆட்சியாளர்களும்.

● பச்சையப்பன்

# தமிழ் முகமூடி அணிந்துவரும் ஆர்.எஸ்.எஸ்.-க்கு எதிராக...

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் காலூன்ற பார்ப்பன - பாசிச ஆர்.எஸ்.எஸ். கும்பல் பல வழிகளிலும் தீவிரமாக முயற்சித்து வருகிறது. தமிழ், தமிழன் என்ற போர்வைக்குள் நுழைந்து கொண்டு இதனைச் செய்வதுதான் தமிழ்நாட்டுக்குப் பொருத்தமான தந்திரம் என்பதால், இராஜேந்திர சோழனுடைய முடிசூட்டு விழாவின் ஆயிர மாவது ஆண்டைக் கொண்டாடுகிறோம் என்ற பெயரில் நவம்பர் -9 ஆம் தேதியன்று தமிழகத்தின் ஆறு மாவட்டங்களில் பேரணி நடத்துவதாக அறிவித்திருந்தது ஆர்.எஸ்.எஸ்.

அப்பன் இராஜராஜன் வடக்கேயிருந்து பார்ப்பனர்களை இறக்குமதி செய்து பார்ப்பன ஆதிக்கத்துக்கு அடிக்கல் நாட்டினான் என்றால், அவனது மகன் இராஜேந்திர சோழன் தமிழகத்தில் பார்ப்பன ஆதிக்கத்தை கற்கோட்டையாக்கினான். சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில், உழவர்களின் பாரம்பரிய உரிமையாக இருந்த நிலங்களைப் பிடுங்கிப் பார்ப்பனர்களுக்குச் சொந்தமாக்கியதும், தமிழைப் புறக்கணித்துப் பார்ப்பனர்களுக்கான சமஸ்கிருதப் பள்ளிகளையும், வேத பாடசாலைகளையும் அமைத்து அவற்றுக்கு மானியம் வழங்கியதும், நூற்றுக்கணக்கான பெண்களைத் தாசிகளாக்கியதும்தான் அவனது சாதனைகள். இந்தச் சாதனைகளுக்காகத்தான் ஆர்.எஸ்.எஸ். அவனைக் கொண்டாடுகிறது.

இராஜேந்திர சோழன் பெயருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாலும், தனது மத வெறி முகத்தை மக்களிடம் மறைக்க முடியாது என்று ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கே சந்தேகம் இருந்ததால், சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் பேரணி என்றும் வெட்கம் கெட்ட முறையில் அறிவித்திருந்தது. விநாயகர் ஊர்வலத்தில் தொடங்கி, படிப்படியாக தனது ஒவ்வொரு மதவெறி நடவடிக்கையையும் இயல்பானதாக மாற்றுவது ஆர்.எஸ்.எஸ். இன் தந்திரமாக இருப்பதால், இதனை மக்களுக்கு உணர்த்தும் நோக்கில் இப்பார்ப்பன பாசிஸ்டுகளை எதிர்த்து, கடந்த 9.11.14 அன்று காலை வடபழனி சந்தை அருகில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் நடத்தின. பெரியார் பற்றாளர்கள்,




தமிழுணர்வாளர்கள், சிறுபான்மை மக்கள் உள்ளிட்டோர் இதனை உளப்பூர்வமாக வரவேற்றனர்.

தமிழ் மன்னர்கள், தமிழ் மொழி ஆகியவற்றை முன்னிறுத்தினால் தமிழகத்தில் காலூன்றி விடலாம் என்ற இந்த சூழ்ச்சித் திட்டத்தின் மூளை, ''பாஞ்சஜன்ய'' என்ற ஆர்.எஸ்.எஸ். - இன் பத்திரிகையின் ஆசிரியரும் எம்.பி.யுமான தருண் விஜய். தமிழிலக்கியங்களின் தொன்மை பற்றியும், தமிழ் மன்னர்களின் பெருமை பற்றியும் இவர் திட்டமிட்டே பேசிவரும் பேச்சுக்களை முக்கியத்துவம் அளித்து பிரசுரிக்கும் தமிழ் ஊடகங்கள், மோடி அரசின் சமஸ்கிருத - இந்தித் திணிப்பு நடவடிக்கைகளை ஒப்பிட்டு இவரை அம்பலப்படுத்துவதில்லை. மாறாக, சமஸ்கிருதத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு வெறி பிடித்த இந்த பார்ப்பன பாசிஸ்டை, தமிழுக்குக் கொடி பிடிக்கும் வட இந்தியர் என்று கூறிப் புகழ்ந்து வருகின்றனர். இதனை அம்பலப்படுத்தி நவம்பர் பு.ஜ. வில் எழுதியிருந்தோம்.

இருந்த போதிலும், தாம் நத்திப் பிழைப்பதற்காக நரகலையும் கிளறிப் பார்த்து நல்லரிசி தேடும் பிழைப்புவாதிகள் இத்தகைய பொன்னான வாய்ப்பை விடுவார்களா? 'வெற்றித் தமிழர் பேரவை' என்ற பெயர்ப்பலகை அமைப்பின் பெயரால் சினிமா கவிஞர் வைரமுத்து அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார்.

ஆரிய-பார்ப்பனக் கும்பலின் தமிழ் அழிப்புக்கும் ஆதிக்கத்துக்கும் எதிராக, தமிழை ஒரு வாளாக உயர்த்திய அயர்லாந்துக்காரர் கால்டுவெல்லை நினைவுகூரத் துப்பில்லாத வைரமுத்து கும்பல், தமிழ் மரபின் விரோதியான ஆர்.எஸ்.எஸ். காரனுக்கு விழா எடுப்பதை அம்பலப்படுத்தும் இயக்கத்தை ம.க.இ.க.வும் பு.மா.இ.முவும் இணைந்து மேற்கொண்டன. மேற்படி விழா நடைபெற்ற மியூசிக் அகாதமி அரங்க வட்டாரம் முழுவதும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், வைரமுத்துவை அம்பலப் படுத்தியது மட்டுமின்றி, விழாவுக்குச் சென்று கொண்டிருந்த 'தமிழர்களிடமும்' முகத்திலறையும் கேள்விகளை எழுப்பின.

● பு.ஜ.செய்தியாளர்

## மீனவர் தூக்கு ரத்து:

# இது நரேந்திர மோசடி!

**ராஜபக்சேவுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டே, தமிழக மீனவர்களின் இரட்சகனாகக் காட்டிக்கொள்ளும் நரேந்திர மோடியின் இரட்டை வேடம் அருவெறுக்கத்தக்கது.**

போதை மருந்து கடத்தியதாகப் பொய் வழக்கு சோடிக்கப்பட்டு, கடந்த 2011 நவம்பரிலிருந்து இலங்கைச் சிறையில்அடைக்கப் பட்டு, தூக்குத் தண்டனை வரை போய், அதிலிருந்து மீண்டு வந்திருக்கிறார்கள், இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள். ஒருபுறம் பொய்வழக்கு என்ற சதி; இன்னொருபுறம் மீட்பு, விடுதலை என்ற நாடகம் என்பவைதான் இதன் பின்னுள்ள உண்மைகள்.

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, காங்கிரசு கூட்டணி அரசு தமிழக மீனவர் பிரச்சினையில் அலட்சியம் காட்டுவதாகவும், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த நிலைமையை மாற்றியமைப்போம் என்றும் மோடி சவடால் அடித்தார். மோடி ஆட்சிக்கு வந்ததும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சுடுவதில்லை என்பதைக் காட்டி, மோடியைக் கண்டு இலங்கை அரசு அஞ்சுவதாக ஒரு மாயத் தோற்றத்தை இந்துவெறி கும்பலும் பார்ப்பன ஏடுகளும் உருவாக்கின. மீனவர்களைச் சுடாதீர்கள், படகுகளை மட்டும் பிடித்துக் கொள்ளுங்கள் என்று ராஜபக்சேவிடம் கூறியுள்ளதாக சு.சாமி திமிராகப் பேசினார். இதன் அடுத்த கட்டமாக, தூக்குத் தண்டனை விதித்து தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் கிரிமினல் நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது

இலங்கையின் தண்டனைச் சட்டத்தில் மரண தண்டனையும் உள்ளடங்கியிருந்தாலும், 1976-க்குப் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டோருக்கு அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு வழங்கி அது ஆயுள் தண்டனையாக்கப்படுவதுதான் வழக்கமாக உள்ளது. கைது செய்யப்பட்ட இம்மீனவர்கள் போதைமருந்து வைத்திருந்ததற்கான எவ்வித ஆதாரத்தைக்கூட காட்டமுடியாத நிலையிலும், வேண்டுமென்றேதான் இலங்கை நீதிமன்றம் அவர்களுக்கு தூக்குத்தண்டனை விதித்து தீர்ப்பு எழுதியிருக்கிறது.

தமிழக மீனவர்கள் மீதான பொய்வழக்கை ரத்து செய்யவும், அவர்களை தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்கவும் மோடி அரசின் வெளியுறவுத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இலங்கை உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்ய வழக்குரைஞர் கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்காக தமிழக அரசுதான் ரூ. 20 லட்சத்தை இந்திய வெளியுறவுத்துறையின் மூலம் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு அனுப்பி வைத்தது. ஆனாலும், சிறையிலுள்ள மீனவர்களைச் சந்தித்து மேல்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை இந்தியத் தூதரக அதிகாரி மேற்கொண்டாரென்றும், பிரதமர் மோடி அவர்களைத் தமிழகச் சிறைக்கு மாற்றக் கோரி ராஜபக்சேவிடம் தொலைபேசியில் பேசியதாகவும் மோடி அரசின் ஆத்



மார்த்த முயற்சியால்தான் அவர்களை ராஜபக்சே விடுதலை செய்துள்ளதாகவும் துதிபாடுகின்றன, பார்ப்பன ஏடுகள்.

விடுதலையான மீனவர்களை விமானம் மூலம் டெல்லிக்குக் கொண்டு சென்று பின்னர் சென்னைக்குக் கொண்டுவந்திருப்பதும், தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டதற்கு மோடி அரசே காரணம் என்று பா.ஜ.க. சுயதம்பட்டம் அடித்துக் கொள்வதும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக பா.ஜ.கவின் நாடகத்தை அம்பலமாக்கியிருக்கிறது.

தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும், இந்தப் பொய்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் மூன்று பேரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய இலங்கை அரசு மறுத்துள்ளது. ஒரே வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒரு தரப்பினருக்கு விடுதலையும் மற்றொரு தரப்பினருக்கு தூக்குத் தண்டனையும் அளிக்கப்படும் விநோதமும் இந்த நாடகத்தில் நடந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, விடுவிக்கப்பட்டுள்ள ஐந்து மீனவர்கள் மீது போதைப்பொருள் கடத்தினார்கள் என்ற அவதூறு - அவமானக்கறை இன்னமும் நீங்கிவிடவில்லை. அவர்கள் ராஜபக்சேவின் கருணையினால் விடுவிக்கப்பட்டுள்ள குற்றவாளிகளே அன்றி, நிரபராதிகள் அல்ல என்கிறது இலங்கை அரசு. சிங்கள கடற்படையை யோக்கியவான்களாகவும், தமிழக மீனவர்களைக் கிரிமினல் குற்றவாளிகளாகவும் காட்டும் இந்த அயோக்கியத்தனத்தை ஏற்றுக்கொண்டுதான் இம்மீனவர்களை மீட்டுவந்துள்ளது மோடி அரசு.

எல்லை தாண்டியதாக குற்றம் சாட்டப்பட்டு இன்னமும் இலங்கைச் சிறையில் தமிழக மீனவர்கள் அடைபட்டு வதைபடுகிறார்கள். படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களது வாழ்வாதாரமே சிதைக்கப்பட்டுள்ளது. அண்மையில் இரண்டு விசைப்படகுகள் பழுதடைந்து கடலில் தத்தளித்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 14 மீனவர்களை எல்லைதாண்டி வந்ததாகக் குற்றம் சாட்டி இலங்கை கடற்படை கைது செய்து கொக்கரிக்கிறது.

மோடியின் பதவியேற்பு விழாவுக்கு ராஜபக்சேவுக்கு அழைப்பு, அனகாரிக தர்மபாலா என்ற சிங்கள இனவெறி புத்த பிட்சுவுக்கு அஞ்சல் தலைவெளியீடு, இலங்கை கடற்படை துணைத்தளபதி ஜெயந்த் பெரோராவுக்கு இந்தியக் கடற்படை அணிவகுப்பு மரியாதை, சிங்கள கடற்படைக்கு இந்திய அரசு அளித்துவரும் பயிற்சி, மீண்டும் அதிபர் பதவியில் அமர ராஜபக்சேவுக்கு மோடி தெரிவித்திருக்கும் வாழ்த்து - இவையனைத்தும் தமிழின விரோதப் போக்கில் மோடி அரசு, காங்கிரசு அரசை விஞ்சுவதையே காட்டுகின்றன. மோடியைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்த வீடணர்கள், இப்போது அவர் வாலைக்குழைத்துக் கொண்டு அந்தப் பக்கம் போவதைப் பார்த்து, இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்காதவர்கள் போல நடிக்கிறார்களே, இந்த நாடகம் மோடி நடத்தியிருக்கும் தூக்கு மேடை நாடகத்தையே தூக்கியடிக்கிறது.

• பாலன்

## தோழர் சிவா விடுதலை:

# அறிவும் மானமும் இல்லாத அதிகார வர்க்கம்!

குண்டர் சட்டத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த பு.ஜ.தொ.மு.-வின் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் தோழர் சிவா விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

செப். 21 அன்று அவரைக் கடத்திச் சென்ற போலீசு குண்டர் சட்டத்தில் சிறைவைக்கப் போகிறது என்பதை ஊகித்து, செப். 25 அன்று இதற்கு உயர்நீதி மன்றத்தில் தடை பெறப்பட்டது. மூக்குடைபட்ட போலீசும், மாவட்ட நிர்வாகமும் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள கிரிமினல்தனமாக யோசித்தன. எழுத்துப் பூர்வமான உயர்நீதி மன்ற உத்தரவு கைக்கு கிடைப்பதற்குள் சிவாவை சிறை வைத்து விடவேண்டும் என்று திட்டமிட்டு செப். 26 அன்று அவசரம் அவசரமாக அவரைக் குண்டர் சட்டத்தின் கீழ் சிறையிலடைத்து, வெற்றிப் பெருமிதத்தில் ஆழ்ந்தன.

இந்த சட்டவிரோதக் காவலுக்கு எதிராகப் போடப்பட்ட மனு நவம்பர் 11-ஆம் தேதியன்று உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. சிவா விடுதலை செய்யப்படுவது உறுதி என்று தெரிந்தவுடனே, சிவாவைக் குண்டர் சட்டத்தில் சிறை வைக்க மாவட்ட ஆட்சியர் போட்டிருக்கும் உத்தரவை, நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று பல்டியடித்து, கலெக்டரை நட்டாற்றில் விட்டது தமிழக அரசு. இதன்படி சிவாவை உடனே விடுவித்திருக்க வேண்டும். ஆனால், மீண்டும் கிரிமினல்தனமாக யோசித்த அதிகாரவர்க்கம், தமிழக அரசின் இந்த உத்தரவைச் சிறைக்கு அனுப்பாமல் வேண்டுமென்றே இழுத்தடித்தது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்வதாக எச்சரித்த பின்னர் நவ.17-ஆம் தேதி வேறு வழியின்றி சிவா விடுவிக்கப்பட்டார்.

தங்களுக்குச் சட்டத்தின் ஆட்சி என்பதில் கடுகளவும் நம்பிக்கை கிடையாது என்பதுடன், மூளையோ, நாணயமோ, தன்மானமோ கிடையாது என்பதையும் போலீசும் அதிகார வர்க்கமும் தம் சொந்த செயல்பாடுகளின் மூலம் நிரூபித்திருக்கிறார்கள். சிவாவின் விடுதலையை விடப் பெரிய வெற்றி இது.

• பு.ஜ.செய்தியாளர்

## "வாத்தியாரைப் போடு!"

# பா.ஜ.க. அரசைப் பணியவைத்த பள்ளி மாணவிகளின் போராட்டம்!

> அரசுப் பள்ளிகளைக் காப்பாற்ற வேண்டுமென்றால், இராஜஸ்தான் பள்ளி மாணவிகள் நடத்திய போராட்டத்தைப் போல நாடெங்குமே நடத்த வேண்டும்.

போதிய ஆசிரியரின்றி, வகுப்பறைகளின்றி, கரும்பலகையின்றி, கழிவறையின்றிதான் நாடெங்கிலும் பல அரசுப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் ஒன்றுதான், ராஜஸ்தான் மாநிலம் ராஜ்சமந்த் மாவட்டத்தின் பிம் நகரில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி. 9 முதல் 12-ஆம் வகுப்பு வரையில் ஏறத்தாழ எழுநூறு மாணவிகள் பயிலும் இப்பள்ளியில் பணியிலிருப்பதோ வெறும் மூன்று ஆசிரியர்கள். இன்று, நேற்றல்ல; கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னதாக மேல்நிலைப்பள்ளியாக மேம்படுத்தப்பட்டதில் இருந்து, 11 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளது. கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல், இந்தி உள்ளிட்ட எந்த பாடத்துக்கும் பாடவாரியான ஆசிரியர்கள் இல்லை. எட்டாண்டுகளாக தலைமையாசிரியரும் இல்லை.

இதில் என்ன வியக்கத்தக்க செய்தி இருக்கிறதென்று நீங்கள் எதிர்க்கேள்வியெழுப்பக் கூடும். பிம் நகரின் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் அவலம் அல்ல பிரச்சினை! இந்த அவலநிலையை அப்பள்ளியின் மாணவிகள் எவ்வாறு மாற்றிக் காட்டினர் என்பதுதான் நாம் கவனிக்கத்தக்க விசயம். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடமும் கூட!

நாட்டின் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், பெண்கல்வியில் மிகவும் பின்தங்கிய மாநிலங்களுள் ஒன்று ராஜஸ்தான். பி.பி.பி. எனப்படும் தனியார் மற்றும் அரசு பங்களிப்புத் திட்டத்தின் கீழ் அரசுப்பள்ளிகளைத் தனியாரிடம் தாரை வார்த்திருப்பதில் முதன்மை மாநிலம். பெண்களுக்கெல்லாம் கல்வி எதற்கு என்று ஒதுக்கித்தள்ளும் சித்தாந்தத்தைக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில் ஒன்று ராஜஸ்தான்.

இப்பள்ளியில் பயிலும் பெரும்பாலான மாணவிகள் பிம் நகரைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். மாதந்தோறும் பீசு கட்டி தனியார் பள்ளியில் படிக்க வைக்க இயலாத ஏழை மற்றும் கூலித் தொழிலாளியின் வீட்டுப் பிள்ளைகள், இவர்கள். மேல்நிலைக் கல்வியைப் பெறுவதற்கு இவர்களுக்கான ஒரே வாய்ப்பு இந்த அரசுப்பள்ளி ஒன்றுதான்.

தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் கிராமப்புற மாணவர்கள் அரசுப்பள்ளிக்கு வந்து செல்வதற்கு இலவச பஸ்பாஸ், இலவச சைக்கிள் வழங்கப்படுகிறது. ராஜஸ்தானிலோ, பள்ளி மாணவர்களுக்கு இவை எதுவும் கிடையாது. கிராமப்புற மாணவர்கள் தமது சொந்தப் பணத்தைச் செலவழித்துத்தான் பள்ளிக்கு வந்தாக வேண்டும். ''நானும் எனது சகோதரியும் தினமும் பள்ளிக்கு வந்து செல்ல ரூ.40.00 செலவாகிறது. இத்தொகை எனது விதவைத் தாயின் தினக்கூலியில் சரிபாதி'' என்கிறார், பன்னிரண்டாம் வகுப்பு மாணவி ஹேமலதா குமாரி. தினமும் 15 முதல் 20 கிலோமீட்டர் தொலைவிலிருந்து பேருந்துக்காக 20 ரூபாய் வரையில் செலவு செய்து பள்ளிக்கு வந்தால், பள்ளியில் ஆசிரியர் இல்லை.

''வகுப்புக்கு வாத்தியாரைப் போடு'' என்று, அம்மாணவிகளின் பெற்றோர்கள் அரசாங்கத்திடம் பல முறை மனு கொடுத்துப் பார்த்தார்கள். இப்பள்ளியிலிருந்து கூப்பிடும் தொலைவிலுள்ள, வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு நடையாய் நடந்து முறையிட்டுப் பார்த்தார்கள். ''ஆகட்டும் பார்க்கலாம்'' என்று பத்தாண்டுகளாக தட்டிக்கழித்தது அதிகார வர்க்கம். ஆனது ஒன்றுமில்லை.

இந்நிலையில், கடந்த அக்டோபர்-2 அன்று பள்ளிச் சீருடையில் அணிதிரண்ட 500-க்கும் மேற்பட்ட அப்பள்ளி மாணவிகள், தமது பள்ளிக்குப் போதுமான ஆசிரியர்களை நியமிக்கக் கோரி வட்டார வளர்ச்சி அலுவலகத்தை முற்றுகையிட பேரணியாகச் சென்றனர். தமது நியாயமான இப்போராட்டத்துக்கு பிம் நகரைச் சேர்ந்த மக்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கில், மக்கள் நடமாட்டம் மிகுந்த கடைவீதியையும், டெல்லி - மும்பை தேசிய நெடுஞ்சாலையையும் கடந்து செல்லும் வகையில் தமது பேரணிக்கான பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தனர்.

''ரகுபதி ராகவ ராஜாராம்... கடவுளே... அரசுக்கு நல்ல புத்தியைக் கொடு!'', ''நாங்கள் எழுநூறு பேர்; ஆசிரியரோ வெறும்

மூன்று பேர்!'', ''கல்வி பெறும் உரிமைக்கான சட்டத்தைப் பெற்றிருக்கிறோம்; ஆனால், பாடம் நடத்த வாத்தியார்தான் இல்லை!''என்று அப்பள்ளி மாணவிகள் எழுப்பிய முழக்கங்கள், அந்நகரத்து மக்களை அவர்களை நோக்கித் திருப்பியது.

பின்னர் அம்மாணவிகள், சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல், வட்டார வளர்ச்சி அலுவலக வாயிலின் முன்பாக சாலையில் அமர்ந்து அவ்வலுவலகத்தை முற்றுகையிட்டனர். வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு, வீதிக்கு வந்து போராடினால் உங்கள் படிப்பு பாழாகிவிடும் என்று அம்மாணவிகளை மிரட்டினர், போலீசாரும் அதிகாரிகளும். ''பாடம் நடத்த வாத்தியாரே இல்லை; எந்தப் படிப்பு பாழாகிவிடும்?'' என்று பதிலடிக் கொடுத்தனர் பள்ளி மாணவிகள்.

மாணவிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக உள்ளூர் மக்களும் அணிதிரண்டனர். செய்தி ஊடகங்களும் குவிந்திருந்தன. மாணவிகளின் கோரிக்கையை ஏற்று விரைந்து நடவடிக்கை எடுக்கிறோம் என்று நைச்சியமாகப் பேசினார், தாசில்தார். ''வெற்று வாக்குறுதிகளை நம்பத் தயாரில்லை. குறைந்த பட்சம் பாடத்திற்கு ஒரு ஆசிரியரை யாவது நியமிக்க வேண்டும். எந்த தேதிக்குள் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள் என்று இப்பொழுதே சொல்லுங்கள்'' என்று சமரசம் பேச முயன்ற அதிகாரிகளைத் திணறடித்தனர் மாணவிகள்.

''இன்னும் ஒரு வாரத்திற்குள் புவியியல், கணக்கு, இந்தி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்'' என்று மாவட்ட ஆட்சியரே நேரில் வந்து வாக்குறுதி கொடுத்தார். ''அக்டோபர் 7-ம் தேதிக்குள் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லையெனில், பள்ளியை இழுத்துப் பூட்டுவோம்'' என்ற எச்சரிக்கை விடுத்து, கலைந்தனர் மாணவிகள்.

அக்டோபர் 7-ம் தேதி வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. பள்ளி மாணவிகளிடம் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் ஏமாற்றினார் மாவட்ட ஆட்சியர். அக்டோபர் 8-ம் தேதி அன்று பள்ளியை இழுத்து மூடினர், மாணவிகள். பள்ளிக்கு வெளியே சாமியானா பந்தல் அமைத்து திறந்தவெளி வகுப்பறையாக தெருவில் அமர்ந்தனர்.

மாணவிகளின் துணிச்சலான இத்தகைய நடவடிக்கைகளால் உந்தப்பட்ட பிம் நகர மக்கள் அம்மாணவிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக அணிதிரண்டனர். அம்மாணவிகளுக்கு டீ, பிஸ்கட் வாங்கிக் கொடுத்து உற்சாகப்படுத்தினர். பள்ளி மாணவிகளுக்கு ஆதரவாக உள்ளூர் மக்களும் அணிதிரண்டதைக் கண்ட நிர்வாகம் செய்வதறியாது திகைத்தது. போராட்டத்தை கைவிடு மாறும் விரைவில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் மீண்டும் வாக்குறுதிகளை வீசினர் அதிகாரிகள். ''ஆசிரியர்கள் நியமிக்கப்படும் வரையில் பள்ளியை திறக்க அனுமதிக்க மாட்டோம். இப்படித்தான் வெளியில் அமர்ந்திருப்போம்'' என்றனர் மாணவிகள், உறுதியான குரலில்.

மாணவிகளின் போராட்டக் களத்திலேயே நான்கு புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தனர் அதிகாரிகள். அதற்கான உத்திரவாதத்தைப் பெற்றுக் கொண்டதையடுத்தே கலைந்தனர், மாணவிகள். தற்பொழுது, ஏழு ஆசிரியர்களுடன் இயங்குகிறது பிம்நகர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி.

இதனைத் தொடர்ந்து, தெவைர், அவெட் ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகளும் பிம் நகர் பள்ளி மாணவிகளின் முன்னுதாரணமானப் போராட்ட வழிமுறையைப் பின்பற்றி போராடத் தொடங்கிவிட்டார்கள். ''கல்வி உரிமையை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தில், பொது மக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தியதற்காகப் பெருமை கொள்கிறோம்'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் தெரிவிக்கின்றனர், பிம்நகர் பள்ளி மாணவிகள்.



ஆசிரியர்களைப் போடுவதாக வாக்குறுதி அளித்து ஏமாற்றுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்த அதிகார வர்க்கத்தை எதிர்த்து, பள்ளியை இழுத்து மூடிவிட்டுத் தெருவையே வகுப்பறையாக மாற்றி இளம் மாணவிகள் நடத்திய அதிரடிப் போராட்டம்.

''வகுப்பறையைக் கட்டு; வாத்தியாரைப் போடு'' என்று வீதியிலிறங்கிப் போராடாமல் கல்விக்கான உரிமையை நிலைநாட்டமுடியாது என்பதை தங்களது சொந்த அனுபவத்திலிருந்து உணர்த்தியிருக்கின்றனர், இப்பள்ளி மாணவிகள். அதுவும், ஆணாதிக்க வக்கிரம் உச்சத்திலிருக்கும் ராஜஸ்தான் மாநிலத்தில், பள்ளி மாணவிகள் இத்தகையதொரு உறுதியானப் போராட்டத்தை நடத்தியிருக்கின்றனர் என்பதில்தான் இப்போராட்டத்தின் முக்கியத்துவமே அடங்கியிருக்கிறது.

● இளங்கதிர்

## கம்யூனிச அகிலத்தின் 150-ஆவது ஆண்டு நிறைவு:

# மூலதனத்தின் சர்வதேசியத்திற்கு முறிவு மருந்து பாட்டாளி வர்க்க சர்வதேசியமே!

**ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு மாற்றாகவும் எதிராகவும் பாட்டாளி வர்க்க உலகமயமாக்கமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்தான் ஒரே தீர்வாக முடியும்.**

''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'' - மார்க்சும் எங்கெல்சும் 1848-இல் பிரகடனப்படுத்திய இந்த முழக்கத்தை அன்று ஒருசில குரல்கள்தான் எதிரொலித்தன. ஆனால் 1864 செப்டம்பர் 28-ஆம் நாளன்று பெருவாரியான மேற்கு ஐரோப்பிய நாடுகளது பாட்டாளிகள் கைகோர்த்து நின்று இந்த முழக்கத்தை எதிரொலித்தார்கள். ஆம்! அன்றுதான் முதல் கம்யூனிச அகிலம் என்றறியப்படும் அனைத்துலகத் தொழிலாளர் சங்கம் நிறுவப்பட்டது. இம்முதலாவது அகிலம் தொடங்கி இன்று 150 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

ஐரோப்பாவில் முதலாளிகளது கொடிய சுரண்டலும் அடக்குமுறையும் நிலவிய காலம் அது. தொழிலாளர்களின் போராட்டங்களை உள்ளூர் கருங்காலிகளைக் கொண்டு ஒடுக்கிய முதலாளிகள், பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வருவோரைக் குறைந்த கூலிக்கு அமர்த்திக் கொண்டு தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்களை உடைக்கவும் செய்தனர். இதற்கெதிராக பிரான்சு மற்றும் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் தங்களது இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து வர்க்க அடிப்படையில் ஒற்றுமையைக் கட்டிக் கொண்டு போராடினர். இதன் தொடர்ச்சியாக, அனைத்துலகத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்க ஐரோப்பிய நாடுகளது தொழிலாளர் வர்க்கப் பிரதிநிதிகளுக்கும், முற்போக்கு - சோசலிச சிந்தனையாளர்களுக்கும் அழைப்பு விடுத்தனர்.

உலக நிகழ்வுகளையும் பாட்டாளி வர்க்கப் போராட்டங்களையும் உன்னிப்பாகக் கவனித்து வந்த கார்ல் மார்க்ஸ், பிரிட்டனிலுள்ள முற்போக்காளர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் இதர நாட்டு தொழிலாளர் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அதனாலேயே அவர் இலண்டன் - செயிண்ட் மார்ட்டின் அரங்கத்தில் நடந்த அனைத்துலகத் தொழிலாளர் சங்கத் தொடக்கக் கூட்டத்துக்கு ஜெர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதியாக அழைக்கப்பட்டார். அக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு, எல்லோரையும் விட கூடுதலான தகுதியுடையவராக கார்ல் மார்க்சைத் தெரிவு செய்து, அகிலத்தின் அடிப்படையான திட்டத்தையும், அதன் கொள்கை மற்றும் அமைப்பு விதிகளையும் வகுத்துக் கொடுக்குமாறு பணித்தது.

முதல் அகிலத்தில் கற்பனாவாத சோசலிஸ்டுகள், சார்ட்டிஸ்டுகள், இத்தாலிய தேசியவாதிகளான மாஜினிகள், குட்டி முதலாளிய புருதோனியவாதிகள், அராஜகவாத பக்கூனியவாதிகள், பிளாங்கியவாதிகள் - என பல்வேறு தரப்பினரும் இருந்த போதிலும், மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிராகத் தொழிலாளர்கள் வர்க்க ரீதியில் ஐக்கியப்பட்டு நின்றனர். ''தொழிலாளர் வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதே முதற் கடமை'' என்று போதித்த கார்ல் மார்க்ஸ், அரசியல் போராட்டங்களை நடத்த வேண்டிய அவசியம் குறித்தும், அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை விடுதலை செய்ய வேண்டிய கடமை குறித்தும் உணர்த்தினார். முதலாவது அகிலத்தை உருவாக்கிக் கட்டியமைப்பதிலும், ஏறத்தாழ 80 லட்சம் பேரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த அதனை போர்க்குணமிக்க தொழிலாளி வர்க்க அமைப்பாக வளர்த்தெடுப்பதிலும் மார்க்ஸ் மிக முக்கிய பங்காற்றினார்.

1864 செப்டம்பர் 28-ஆம் நாளன்று, இலண்டன் - செயிண்ட் மார்ட்டின் அரங்கத்தில் நடந்த அனைத்துலத் தொழிலாளர் சங்கத்தின் தொடக்கவிழா கூட்டம்.



வேலைநிறுத்த உரிமை, எட்டுமணி நேர வேலை, பிற தொழிற் சங்கங்களுக்கு ஆதரவு தருதல் என்பதோடு அகிலம் தன்னை வரம் பிட்டுக் கொள்ளவில்லை. பாரிஸ் நகர பித்தளைத் தொழிலாளர் களின் போராட்டம், ஜெனிவா கட்டிடத் தொழிலாளர் போராட்டம், பெல்ஜிய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் போராட்டம் ஆகியவற்றை ஆதரித்துப் போராடியதோடு, ஐரோப் பிய நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் வேலைநிறுத்தங்களை உடைக்க முயற்சிக்கும் முதலாளிகளுக்கு எதிராக லண்டன் மற்றும் எடின்பர்க் நகரங்களில் தொழிலாளர்களை அணிதிரட்டிப் போராடியதிலும் அகிலம் முக்கிய பங்கு வகித்தது. உழைக்கும் வர்க்கப் பெண்களின் உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் குரலெழுப்பியது. அயர்லாந்து விடுதலைப் போராளிகளுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டபோது, அரசியல் கைதிகளைத் தூக்கிலிடுவதை எதிர்த்து அவர்களின் மனித உரிமைகளுக்காகப் போராடியது. போலந்தின் விடுதலையையும், இத்தாலியின் ஐக் கியத்தையும் ஆதரித்ததோடு, அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிக்க லிங்கன் தலைமையில் நடந்த போருக்கு ஆதரவாக தொழி லாளர்களைத் திரட்டி வேலை நிறுத்தப் போராட்டங்களையும் நடத்தியது.

தொழிலாளர்கள் தங்களது அரசியல் அதிகாரத்தை வென் றெடுக்க வேண்டும் என்ற மார்க்சின் கருத்து 1871-இல் பாரிஸ் கம்யூனில் முதன்முதலாக செயல்வடிவம் பெற்றது. உலகில் முதன்முதலாக தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய வரலாற்றுச்சிறப்புமிக்க இப்புரட்சியில், பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காகக் கண்டறியப்பட்ட அரசியல் வடிவமே கம்யூன் என்று அகிலத்தின் கூட்டமொன்றில் மார்க்ஸ் உரையாற்றினார். அந்த உரையின் விரிவாக்கம்தான் பின்னர் ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' எனும் நூலாக வெளிவந்தது. ஏற்கெனவே உள்ள அரசு எந்திரத்தை தொழிலாளி வர்க்கம் அப்படியே எடுத்துக் கொண்டு தனது சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளவே முடியாது என்ற மிக முக்கியமான உண்மையை பாரிஸ் கம்யூன் எடுத்துக் காட்டியுள்ளதாக மார்க்ஸ் உணர்த்தினார்.

1872 -இல் நடந்த ஹேக் நகரில் நடந்த மாநாட்டின்போது, அராஜகவாதிகளுக்கும் மார்க்சியவாதிகளுக்குமிடையிலான சித் தாந்தப் போராட்டத்தில் முதலாவது அகிலம் பிளவுபட்டது. இருப்பினும், ''மார்க்சின் சாதனைகளுக்கு மகுடம் சூட்டுவதாக முதலாவது அகிலம் அமைந்துள்ளது ... இந்த அகிலம் ஒன்பது ஆண்டுகளே நீடித்தது என்றாலும், எல்லா நாடுகளது பாட்டாளி களிடம் அது உருவாக்கிய உயிர்த்துடிப்புள்ள ஐக்கியமானது இன்றும் நீடித்து நிலவி வருகிறது என்பதோடு, முன்னெப் போதையும் விட வலிமையாக இருக்கிறது. ஒரே படையாக, ஒரே கொடியின் கீழ் திரண்டு நிற்கிறது...'' என்று மார்க்சின் நினை வஞ்சலிக் கூட்டத்தில் உணர்ச்சி பொங்க உரையாற்றிய எங் கெல்ஸ் குறிப்பிட்டார்.

முதலாவது அகிலம் பிளவுபட்டு செயலிழந்த பின்னர், 1889-இல் பாரிஸ் நகரில் எங்கெல்சும், சோசலிசத் தலைவர்களான ஆகஸ்ட் பெல், வில்லியம் லீப்னெக்ட் உள்ளிட்ட பலரும் பங் கேற்ற 18 நாடுகளின் சோசலிஸ்ட் தொழிலாளர் அமைப்புகள் நடத்திய கூட்டமே இரண்டாவது அகிலத்தின் தொடக்கமாக அமைந்தது. மே முதல்நாளை அனைத்துலகத் தொழிலாளர் தின மாக அறிவித்தது, மார்ச் 8-ஆம் நாளை அனைத்துலகப் பெண் கள் தினமாக அறிவித்தது, 8 மணி நேர வேலை நேரத்திற்கான



INTERNATIONAL
WORKING MEN'S ASSOCIATION,
CENTRAL COUNCIL, 18, GREEK STREET, LONDON, W
On the 25th of September and three following days,
A CONFERENCE
of Delegates from the principal branches of the Association in FRANCE, GERMANY, SWITZERLAND, and BELGIUM will be held with the CENTRAL COUNCIL, when the following programme will be discussed :—
And on the 28th of September,
A SOIREE
ST. MARTIN'S HALL,
LONG ACRE.
The Entertainment will consist of Tea, Choruses by the German Working Men's Choral Society, Operatic and other selections by the Band of the Italian Working Men's Association, Dancing, etc.
During the Evening short addresses will be delivered by the continental Delegates.
Tickets to admit at half-past 7, including Tea, Concert, Addresses and Dancing, One Shilling.
Tickets to admit after Tea at half-past 8, to Concert, Addresses and Dancing, Six-pence.
DANCING AT HALF-PAST TEN.

முதல் கம்யூனிச அகிலம் என்றறியப்படும் அனைத்துலகத் தொழிலாளர் சங்கத்தின் தொடக்கவிழா நிகழ்ச்சியை அறிவிக்கும் துண்டுப் பிரசுரம்.

கோரிக்கை முதலானவற்றுடன் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கப் பணியை, தோழர் எங் கெல்சை கௌரவத் தலைவராகக் கொண்டி ருந்த இரண்டாவது அகிலம் தொடர்ந்து முன் னெடுத்துச் சென்றது.

எங்கெல்சின் மறைவுக்குப் பின்னர் 1914-இல் முதல் உலகப் போர் தொடங்கியபோது, ''தந்தையர் நாட்டைக் காப்போம்'' என்று தத்த மது நாடுகளது அரசுகளின் தேசியவெறி, ஆக் கிரமிப்புப் போர் நடவடிக்கைகளை ஆதரித்து சந்தர்ப்பவாத சகதியில் இரண்டாவது அகிலம் மூழ்கியபோது, ஏகாதிபத்தியப் போர்களுக்குத் தொழிலாளி வர்க்கத்தைப் பலியிடுவதை எதிர்த்து பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை தோழர் லெனின் உயர்த்திப் பிடித்தார். முதலாளித்துவ தேசியவாதமா, பாட்டாளி வர்க்க சர்வதேசியமா என்று இந்த அகிலம் பிளவுபட்டதால், 1916-இல் இரண்டாம் அகிலம் கலைக்கப்பட்டது. காவுஸ்த்கி, பெர்ன்ஸ்டைன் முதலான சந்தர்ப்பவாதி களுக்கும் குறுகிய தேசியவெறியர்களுக்கும் எதிராகப் போராடிய லெனின், உலகை மறு பங்கீடு செய்வதற்கான ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு விடுதலைக்கான யுத்தமாக மாற்ற வேண்டுமென உணர்த்தினார். ஏகாதிபத்திய யுத் தத்தில், தமது தந்தையர் நாட்டை ஆதரிக்காத

எவரும் தேசத்துரோகிகள் என்று பிரச்சாரம் நடந்து வந்த நிலையில், அதற்கெதிராக எதிர்நீச்சல் போட்டு பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கடமையை உணர்த்தி லெனின் முன்வைத்த பாதையின் வெற்றியை ரஷ்ய சோசலிசப் புரட்சி பறைசாற்றியது.




1919-லிருந்து 1943 வரை கம்யூனிச அகிலத்தின் சார்பில் பல்வேறு ஐரோப்பிய மொழிகளிலும் வெளியிடப்பட்ட ''கம்யூனிச அகிலம்'' எனும் அரசியல்-கோட்பாட்டு இதழ்.

பின்னர், 1919-ஆம் ஆண்டில் தோழர் லெனின் தலைமையில் மூன்றாவது கம்யூனிச அகிலம் மாஸ்கோவில் நிறுவப்பட்டது. அனைத்துலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான போர்த்தந்திரத்தை வகுத்துக் கொடுத்து, ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்துக்கும் காலனி, அரைக்காலனி மற்றும் ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களது விடுதலைக்கும் வழிகாட்டியது. லெனின் மறைவுக்குப் பின்னர் தோழர் ஸ்டாலின் தலைமையில் இயங்கிய மூன்றாவது அகிலம், பல்வேறு நாடுகளிலும் கம்யூனிஸ்டு கட்சிகளைத் தொடங்கவும் வளரவும் உதவியதோடு, ஐரோப்பாவில் இட்லரின் பாசிச ஆக்கிரமிப்புக்கு எதிராக நாடுகளின் சுதந்திரத்தையும் மக்களின் விடுதலையையும் இலட்சியமாகக் கொண்டு செயல்படவும், பாசிசத்துக்கு எதிராக ஐக்கிய முன்னணியைக் கட்டியமைத்துப் போராடவும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்துக்கு வழிகாட்டியது. அனைத்துலக பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான பொதுத் திட்டத்தின் அடிப்படையில், ஒவ்வொரு நாட்டின் தனிச்சிறப்பான நிலைமைகளையும், அந்நாட்டின் அரசியல்-சமூக வளர்ச்சியின் நிலைமையையும் வர்க்க முரண்பாடுகளையும் கணக்கில் கொண்டு வழிகாட்டுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவும், சோவியத் ரஷ்யா மீதான பாசிச இட்லரின் ஆக்கிரமிப்புப் போரைத் தொடர்ந்து போர்ச்சூழல் காரணமாக வழிகாட்டுவதிலும் முடிவெடுப்பதிலும் உள்ள இடர்ப்பாடுகள் காரணமாகவும், அனைத்துலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான பொதுவழியை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சிகள் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப இதனைச் செயல்படுத்த வேண்டுமென்ற வழிகாட்டுதலுடன் 1943 மே15-ஆம் நாளன்று இந்த அகிலம் கலைக்கப்பட்டது.

அகிலம் கலைக்கப்பட்ட போதிலும், கம்யூனிச ரஷ்யாவிலும் சீனாவிலும் முதலாளித்துவப் பாதையாளர்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய போதிலும், முதலாளித்துவ தேசியவெறிக்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போர்களுக்கும் எதிரான அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசிய உணர்வும் ஒற்றுமையும் இன்றும் நீடித்து வருகிறது. கம்யூனிஸ்டுகள் தேசப்பற்று இல்லாதவர்கள் என்கிற முதலாளித்துவ அவதூறுகளும் குற்றச்சாட்டுகளும் இந்தியா மட்டுமின்றி எல்லா நாடுகளிலும் இன்னமும் தொடர்கின்றன. ஆனால், 150 ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய அவதூறுகளை மறுதலித்து, கம்யூனிஸ்டுகளுக்கு தேசிய எல்லைகள் தடையாக இருப்பதில்லை என்பதை உணர்த்தி, மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிராக ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற முழக்கத்துடன் அனைத்து நாடுகளிலுமுள்ள தொழிலாளர்கள் வர்க்க ரீதியில் சர்வதேச உணர்வுடன் ஓரணியில் திரண்டு நின்றார்கள்.

இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாக்கக் கொள்கைகளின் விளைவாக, மூலதனம், உற்பத்தி, சந்தை, உழைப்புப் பிரிவினை ஆகியன உலகமயமாகி வருவதன் விளைவாக, வெவ்வேறு தேசிய இனங்கள் - நாடுகளின் உழைக்கும் மக்கள் பிழைப்புக்காகத்தான் என்றாலும், பெருமளவில் இடம்பெயர்வதும் உழைப்புச் சந்தையில் ஒன்றுகுவிக்கப்படுவதும் நடக்கிறது. இது பாட்டாளி வர்க்க சர்வதேச ஒற்றுமையைத் துரிதப்படுத்துகிறது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு மாற்றாகவும் எதிராகவும் பாட்டாளி வர்க்க உலகமயமாக்கம்தான் ஒரே தீர்வாக முடியும். பாட்டாளி வர்க்க சர்வதேசியம்தான் பாட்டாளி வர்க்க உலகமயமாக்கத்துக்குப் பொருத்தமான அரசியலாகவும், பாட்டாளி வர்க்க ஐக்கியம்தான் அதற்கான அமைப்பாகவும் இருக்க முடியும்.

இன்று, உலக வர்த்தகக் கழகம், ஜி-7, ஜி-20, சார்க், ஏசியான் என்று பலதரப்பட்ட சர்வதேசக் கூட்டணிகளைக் கொண்டுள்ள ஏகாதிபத்திய மேலாதிக்கத்துக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மேலும் விரிவடைந்துள்ளன. ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்க சுரண்டல்-ஒடுக்குமுறைக்கான ஆயுதமாக இந்தியா போன்ற துணை வல்லரசுகளும் பிராந்திய வளையங்களும் பயன்படுத்தப்படும் சூழலில், ஒரே பொருளாதார, தொழில் - வர்த்தக வளையத்தில் உள்ள எந்த நாட்டிலும் தேசிய இன விடுதலையோ, பாட்டாளி வர்க்கப் புரட்சியோ வெற்றிபெறவும் நிலைத்து நிற்கவும், மற்ற பிற நாடுகளது பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கங்களின் ஆதரவும் ஒருங்கிணைப்பும் இன்று தேவையாக உள்ளது. ஏகாதிபத்திய மூலதனத்துக்கும், குறிப்பாக பன்னாட்டுத் தொழிற்கழகங்களுக்கும் எதிரான போராட்டங்களில் தேசிய எல்லைகளையும், தேசிய இன, மொழி, பிராந்திய அடையாளங்களையும் கடந்த பாட்டாளி வர்க்க அமைப்புகளும் இயக்கங்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. ''உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!''

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2 - ஆம் பக்கத் தொடர்ச்சி...


கோத்தகிரியில்...

கோயம்பேடு வழியாக மதுரவாயலுக்கும், மதுரவாயலில் தொடங்கி அரும்பாக்கம், அமைந்தகரை, கீழ்ப்பாக்கம் வழியாக எழும்பூர் வரை செங்கொடி ஏந்தி இரு சக்கர வாகனப் பேரணியாக கொடியேற்றும் நிகழ்ச்சிக்குச் சென்றனர். சிவப்புச் சட்டை அணிந்த இளைஞர்களின் அணிவகுப்பை உழைக்கும் மக்கள் ஆங்காங்கே நின்று ஆர்வத்தோடு கவனித்தனர்.

கடலூர் அண்ணாகிராமத்திலும், தூத்துக்குடியிலும் மாணவர்கள் பங்கேற்புடன் அரங்குக் கூட்டங்களை நடத்தினர்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பு.ஜ.தொ.மு. வினர் தாங்கள் செயல்படும் சங்கக் கிளைகளில் கொடியேற்றியும், தொழிலாளர்களது குடும்பத்தினரையும் பங்கேற்கச் செய்யும் வகையில் அரங்குக் கூட்டங்களையும் நடத்தினர்.

நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கம் சார்பாக கோத்தகிரியிலும், பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் சார்பில் திருச்சி பெல் தொழிற்சாலை முன்பு உள்ள டிரைனிங் சென்டர் அருகிலும், சுமைப்பணித்தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம் சார்பாக குட்செட் பகுதியிலும் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து செங்கொடியேற்றி, பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி நவம்பர் புரட்சி தினத்தைக் கொண்டாடினர்.

ஓசூரில் தோழமை அமைப்பான வி.வி.மு.வுடன் இணைந்து டி.வி.எஸ். கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியான கொத்தகொண்டப்பள்ளியில் உழைக்கும் மக்கள் மத்தியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அம்மக்களோடு இணைந்து எழுச்சிகரமாக கொண்டாடினர்.

திருவள்ளூர் மாவட்டத்தின் ஆவடி - அம்பத்தூர் பகுதி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டக்குழு தோழர்கள் இணைந்து சென்னை பட்டாபிராம் பகுதியிலும், திருவள்ளூர் மாவட்டத் தோழர்கள் கும்மிடிபூண்டியிலும் நவம்பர் புரட்சிநாள் அரங்குக் கூட்டங்களை நடத்தினர்.

சென்னை பட்டாபிராம் பகுதியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் திரு.வெள்ளையன் மற்றும் மார்க்சிய - பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் தோழர் தமிழேந்தி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

வீரமங்கை வேலு நாச்சியார் வேடமணிந்த 7 வயதான பூவரசி, சார்லி சாப்ளின் வேடமணிந்த 7 வயதான பிரபஞ்சன், ‘‘நாடு முன்னேற்றமுன்னு மோடி முழங்குறாரு’’ என்று பாட்டுப் பாடி மோடியின் முகத்தில் காறி உமிழ்ந்த 3 வயதான செயலினி உள்ளிட்ட தொழிலாளர்களது குழந்தைகள் பேருற்சாகத்தோடு பங்கேற்று தங்களது திறமைகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தினர்.

புதுச்சேரியில், இணைப்பு சங்கங்கள் இயங்கும் பகுதியான வில்லியனூர் பகுதியில் பு.ஜ.தொ.மு.வினர் அரங்கக் கூட்டத்தை நடத்தினர். கோவை சின்னவேடம்பட்டி சி.ஆர்.ஐ. கம்பெனி அருகில் தொழிலாளர்களின் குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற விழாவில் திரளானத் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

ம.க.இ.க. வின் சார்பில் வேலூர் தோட்டப்பாளையத்திலும், தஞ்சையிலும் தெருமுனைக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் பங்கேற்புடன் நவம்பர் புரட்சிநாள் விழாவை கொண்டாடினர். சென்னையில் பெ.வி.மு.வுடன் இணைந்து நடத்திய அரங்குக் கூட்டத்தில், ‘‘புரட்சி அழைக்கிறது நீங்கள் தயாரா?’’ என்ற தலைப்பில் பேசிய ம.க.இ.க. தோழர் துரை.சண்முகத்தின் சிறப்புரையும், ஜெ - நடத்திய வளர்ப்பு மகனின் ஆடம்பரத் திருமணத்தை அம்பலப்படுத்தும் ‘‘கல்யாண கதை கேளு’’ என்ற ம.க.இ.க.வின் பாடலை ஜெயலலிதா, சசிகலா, தினகரன் போன்று வேடமிட்டு காட்சிப்படுத்திய கலை நிகழ்ச்சியும் பெரும் வரவேற்பைப் பெற்றது.


திருச்சியில்...

பெருந்திரளாகவும் பேரார்வத்தோடும் ஆலைத் தொழிலாளர்கள், மாணவர்கள் உள்ளிட்டு அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களின் பங்கேற்புடன் புரட்சிகர அமைப்புகள் நடத்திய நவம்பர் புரட்சி நாள் விழாக்கள் வர்க்க உணர்வூட்டும் மக்கள் திருவிழாவாக அமைந்திருந்தது.

- பு.ஜ.செய்தியாளர்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# அமெரிக்க ஏகாதிபத்தியம் எபோலா வைரஸை விடக் கொடியது!

உலகையே அச்சுறுத்திச் சென்ற பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்களின் வரிசையில் புதிய வரவாகச் சேர்ந்திருக்கிறது எபோலா எனப்படும் இரத்த ஒழுக்கு தொற்றுநோய். காங்கோவின் எபோலா நதிக்கரையையொட்டி 1976-களில் தோற்ற மெடுத்த இந்த உயிர்க்கொல்லி நோய், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அவ்வப்பொழுது பரவி ஏறத்தாழ 2,500 பேரைப் பலி கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், தற்போதைய நிலைமையோ முன்பைவிட அச்ச மூட்டுவதாக உள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நைஜீரியா, லைபீரியா, செனகல், சியாரா லியோன், கினியா ஆகிய நாடுகளில் பரவத் தொடங்கிய இத்தொற்றுநோய்க்கு இது வரை 5,000 பேர் பலியாகியுள்ளனர். அடுத்த டிசம்பர் மாதத்திற்குள் இச்சாவு எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தொட்டுவிடும் என்பதோடு, உலகமயத்தின் விளைவாக நோயும் கண்டம் விட்டு கண்டம் பரவிவிடும் என்ற அச்சமும் உலகெங்கிலும் பரவியிருக்கிறது.


ஆப்பிரிக்க கருப்பின மக்களை அடிக்கடித் தாக்கி வரும் எபோலா நோய் கண்டுபிடிக்கப் பட்டு முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டாலும், இந் நோயை முற்றிலும் குணப்படுத்தக்கூடிய மருந்துகளோ, தடுப்பூசிகளோ ஆராய்ச்சி நிலையைத் தாண்டி அடுத்த கட்டத்துக்குச் செல்லவில்லை. இந்த அலட்சியத்திற்கு மருந்து உற்பத்தியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பன்னாட்டு மருந்து கம்பெனி களின் நிறவெறியும் இலாபவெறியும்தான் காரணமாகும். குறிப்பாக, கனடா அரசின் பொது சுகாதாரத் துறை பத்தாண்டுகளுக்கு முன்பே இந்நோய்க்கான தடுப்பு மருந்தை உருவாக்கி அதற் கான காப்புரிமையைப் பெற்றுள்ளபோதும், அம்மருந்தினை உற் பத்தி செய்யும் உரிமையை கனடா அரசிடமிருந்து பெற்றுள்ள நியூலிங்க் ஜெனடிக்ஸ் என்ற அமெரிக்க மருந்து கம்பெனி. அம் மருந்தை சந்தைக்குக் கொண்டுவராமல் முட்டுக்கட்டை போட்டுவருகிறது. ஏகாதிபத்திய கம்பெனிகளின் நலன்களுக் காக உருவாக்கப்பட்டுள்ள அறிவுசார் சொத்துடமை சட்டத்தைப் பயன்படுத்தி நியூலிங்க் நிறுவனம் நியாயமற்ற முறையில் நடந்துகொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட மருந்தைச் சோதித்துப் பார்க்கக்கூட முடியாதபடி தடைபோட்டு வருவதாக மேற்குலக அறிவியலாளர்கள் பலரும் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.



எபோலா வைரஸால் தாக்குண்டு, கடும் காய்ச்சல் காரணமாக லைபீரியாவிலுள்ள மன்ரோவியா நகரச் சாலையில் மயங்கி விழுந்து கிடக்கும் ஐந்து வயது சிறுமி எஸ்தர். சாவோடு போராடிக் கொண்டிருக்கும் அச்சிறுமியைத் தூக்குவதற்கு மனது துடித்தாலும், அருகில் சென்று தூக்கினால் தம்மையும் எபோலா தொற்றிக்கொண்டுவிடும் என்ற அச்சம் காரணமாக, கையறு நிலையில் 100 அடி தூரம் ஒதுங்கி நிற்கும் அந்நகர மக்கள். இப்படி ஒதுங்கி நின்றவர்களில் எஸ்தரின் அப்பா லெஸ்டர் மோரிஸும் ஒருவர் என்பது எத்துணை வேதனையானது, கொடுமையானது.

செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள மருந்தே இல்லாத இந்த நிலையும்; தனியார்மயம்-தாராளமயம் ஆப்பிரிக்க கண்டத்து நாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் வறுமையும் ஏழ்மையும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேடுகளும்; உள்நாட்டுச் சண்டையாலும் ஏகாதிபத்திய கொள்ளையாலும் அந்நாடுகளின் அரசுகள் போண்டியாகி நிற்பதும்தான் நோய் தீவிரமாகப் பரவு வதற்கும், சாவு எண்ணிக்கை உயர்ந்துகொண்டே போவதற்கும் காரணமாக அமைந்துள்ளன.

51 மருத்துவர்களே உள்ள லைபீரியாவிற்கும் (மக்கள் தொகை 42 இலட்சம்) 136 மருத்துவர்களே உள்ள சியாரா லியோனுக்கும் (மக்கள்தொகை 60 இலட்சம்) இப்பொழுது உடனடியாகத் தேவைப்படுவது மருத்துவர்களும், தாதி களும், அடிப்படையான சில மருந்துகளும்தான். எபோலா நோயை எதிர்கொள்ளக்கூடிய முழுத் திறன் தன் னிடம் இல்லாதபோதும், இந்த மனிதாபிமான உதவியைச் செய்வதற்காக மருத்துவர்களையும் தாதிகளையும் கியூபா அனுப்பி வைத்திருக்கிறது. ஆனால், எபோலா வைரஸின் காப்புரிமையையும், அந்நோய்க்கான மருந்து உற்பத்தி உரிமையையும் பெற்றுள்ள பெரியண்ணன் அமெரிக்காவோ லைபீரியாவிற்கு மருத்துவ உதவி என்ற போர்வையில் 3,000 சிப்பாய்களைக் கொண்ட படையணியை அனுப்பி வைத்திருக்கிறது.




ஏழை நாடுகள் மீதான தனது இராணுவத் தலையீட்டை மனித உரிமை, ஜனநாயகம் என்ற பெயரில் நியாயப் படுத்தி வரும் அமெரிக்காவுக்கு, அவசரகால மருத்துவ உதவி என்ற புதிய முகாந்திரம் கிடைத்திருக்கிறது. இதனாலேயே, மனிதப் பேரழிவாகக் கருத வேண்டிய இந் நோய்த் தாக்குதலை, உலகின் அமைதிக்கும் பாது காப்புக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாக, தீவிரவாதத் தாக்குதலைப் போல வரையறுத்துள்ளன, மேற்குலக ஏகாதிபத்தியங்கள்.